www.padippakam.com



# கூட்டாஞ்சோறு

காலாண்டிதழ்

னிச்சுற்றுக்கு திருவள்ளுவராண்டு 2035 சித்திரை-ஆனி நன்கொடை ரூ.10/-



- மக்களை அணி திரட்டுவதே முதற் பணி - அ. மார்க்ஸ்
- கந்தர்வன் சிறுகதை
- இளம் எழுத்தாளர்களின் இலக்கிய வழிகாட்டி - வல்லிக்கண்ணன்
- தீண்டத்தகாத இந்துத்துவம் - டாக்டர் அம்பேத்கர் குறித்து மயிலை பாலு
- கவிதைகள், கட்டுரைகள்

இன்னும் . . . இன்னும் . . .

படிப்பகம்

www.padippakam.com

# ஏவுகணைத் துண்டினை கையிலேந்திய சிறுமி

■ சூசன்பிரைட்

தமிழில்: அமரந்த்தா

ஒரு பேச்சுக்குச் சொல்லுங்கள்-
இது சரியென்று வைத்துக்கொள்வோம்;
ஒருவர் ஒரு நாட்டையே
ஒற்றை மனிதராகக் குறுக்கிப் பார்க்கலாம்-
அல்லது "விடுதலையை விரும்பும் ஜார்ஜ்"
அதனை விரும்பாத சதாமை
ஒழித்துக்கட்டலாம்.

ஒரு பேச்சுக்குச் சொல்லுங்கள்-
இது சரியென்று வைத்துக்கொள்வோம்;
ஒரு தனி மனிதர்
ஒரு முழுமை பண்பாட்டையே
அடையாளப் படுத்தலாம்-
அதாவது ஒருவருக்குப் பொருந்துவது
அனைவருக்கும் பொருந்தும் எனலாம்.

ஒரு தனிமனிதர் மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்ய
முடியும்;
ஓர் உயிரினம் இப்பரந்த உ கை பிரதிநிதித்துவம்
செய்ய முடியும்-
இதுவே யாதார்த்தம் பற்றி, வரலாறு பற்றி
சிந்திக்கும் நம்பகமான வழியென்று
ஒரு வாதத்திற்காக வைத்துக்கொள்வோம்.

ஒரு பேச்சுக்கு,
இப்போதைக்கு ஒரு தனிமனிதர்
ஈராக் நாட்டை பிரதிநிதித்துவம் செய்ய அனுமதிப்போம்
அதற்கு நாங்கள் யாரைத் தேர்ந்தெடுக்கிறோம்
என்று சொல்கிறேன்-
1998-ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று
ஏவுகணையிலிருந்து சிதறிய துண்டை ஏந்தியிருக்கும்
பத்து வயதான அல் தீர் நகரத்து இஸ்லாமிய சிறுமியான
இவளை
ஈராக்கின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கிறோம்.

அவளது விரல்நுனிகள் பிரகாசிக்கின்றன.
அவளது தலைக்குட்டையின் பூவேலை நுணுக்கமானதாக
புத்தம்புதிதாக இருக்கிறது
அவள் கையிலேந்தி உலகிற்குக் காட்டும் ஏவுகணைத் துண்டு
ஒரு தகர்க்கப்பட்ட பள்ளிக்கூடத்தில் கண்டெடுத்தது.
ஈராக்கின் பிரதிநிதியாக நாங்கள் அவளைத் தேர்ந்தெடுக்கிறோம்.



(கல்சுரல் லாஜிக் என்ற மார்க்ஸிய தத்துவம்
மற்றும் நடைமுறைக்கான இணைய இதழிலிருந்து)

படிப்பகம்

www.padippakam.com

கூட்டாஞ்சோறு
காலாண்டிதழ்

திருவள்ளுவராண்டு 2035 சித்திரை-ஆனி
(தனிச்சுற்றுக்கு)

ஆசிரியர்:
**மயிலை பாலு**

ஆசிரியர் குழு:
**கே.பி. பாலச்சந்தர்**
**சூரியச்சந்திரன்**
**இரா. குமரகுருபரன்**
**சிவ. செந்தில்நாதன்**
**தா. மணிமேகலை**

பதிப்பாளர்:
**வ. இராமு**

நிர்வாகம்
**கி. அன்பரசன்**
**வெ. ரவீந்திரபாரதி**

ஒளியச்சு:
**வி. மோகன்**
ஸ்ரீ கிராபிக்ஸ், சென்னை - 15.
**கு. ஜெயந்தி**

நன்கொடை விவரம்:
ஆண்டுக்கு ரூ.40/-
**'கூட்டாஞ்சோறு'**
என்கிற பெயருக்கு மாற்றத் தக்கதாக
காசோலை / வரைவோலை
அல்லது பணவிடை
அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்
**'கூட்டாஞ்சோறு'**
3, 'சி' பிளாக், வள்ளீஸ்வரன் தோட்டம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028.

எழுத்துக்கும் பேச்சுக்கும் இயக்கத்துக்கும் விலங்கிடப்பட்ட நெருக்கடி நிலை காலத்திலிருந்து நாடு பல மாற்றங்களடைந்து கால் நூற்றாண்டைக் கடந்த இன்றைய நிலையில் தனிமனித மேம்பாட்டின் ஊடாக சமூகம் ஒளிர்வதாக அதிகம் பேசப்படும் காலத்தில் 'கூட்டாஞ்சோறு' காலாண்டிதழ் வெளிவருகிறது.

இன்று, துப்பாக்கிகளைவிட தொலைக்காட்சிப் பெட்டிகளே வலுவான ஆயுதங்களாகச் செயல்படுத்தப்படுகின்றன. துப்பாக்கிகளை எதிர்த்தெழுந்த மனிதர்களால் தொலைக்காட்சிப் பெட்டிகளோடு எதிர்பேச்சுகூட பேசமுடிவதில்லை. கட்டை விரல்களை வெட்டும்போது உண்டாகும் இரத்தக்காயம் வெளியே தெரிந்துவிடுவதால் மூளையின் உள்நரம்புகளை உருவப் பழகிக்கொண்டார்கள். கபடத்தனமும் கயமைத்தனமும் நேர்மையானவை என்று அரிதாரம்பூசி ஆளைக் கவிழ்க்கின்றன. சமூகப் பற்றாளர்கள் ஒளிரும் கருத்தியல்களின் சாய்வுகளை அடையாளம் காணவும் அடையாளம் காட்டவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

காட்டாற்று வெள்ளம் கரையை உடைத்து தன்னருகில் உள்ளவற்றை எல்லாம் இழுத்து அழித்து கடலில் கலக்கும். நீர்த்துளிகளை அணைகளில் சேகரித்தாலோ மின்சக்தியாகவும் வளமிக்க மண்சக்தியாகவும் மடைமாற்றம் செய்யலாம். அமைப்பாய் திரளுவதன் மூலம் சமூக சக்திகளை ஒருங்கிணைத்து ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ள முடியும். விடுதலையின் சிறகாகவும் வீரத்தின் கால்களாவும் திகழ முடியும். 'கூட்டாஞ்சோறு' காலாண்டிதழ் இப்பணியைச் செய்ய முயலும். ஒடுக்கப்பட்டவர்களின் ஊடகமாய் அமையும்.

- ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com

# அழகின் நாதம்

உலகத்து அழகெல்லம்
சீதை உட்கொண்டு விட்டாள்
என்ற கம்பனின் பிதற்றலைக்
கேட்டு
கருவுள்ளிருக்கும்
பசுங்கன்று நகைக்கிறது!

உன்னைவிட அழகு
இப்புவியில் இல்லையென்று
கலவி மயக்கத்தில் ஒருவன்
கழறிய ரசவார்த்தை கேட்ட புவி
எங்காவது வேர் வழியே
ஒரு ரோஜாப்பூவை
வெளியில் பிதுக்கி இருக்கும்!

ஆயிரம் விலங்குகளோடு
அறைக்குள் வந்து அடங்கிய
ஒருவனின்
அத்தனை விலங்குகளையும் உடைத்து
ஒரு புதுச்சிறகை கையில் கொடுத்து
புலர்கிறது சிற்றஞ்சிறுகாலை!

கைகளுக்குள் சிக்காதக் காற்று
ஒரு நீர்குமிழிக்குள் சிக்கி
காதலனிடம் சிக்கிய காதலியாய்
வெட்க அவஸ்தையில்
முகம் வெளிறி உடைகிறது!

இறுகி இறுகித்
திடமாகிப்போன
துயரப் பனிக்கட்டிகள்
தேம்பித் தேம்பி அழுதவுடன்
கண் வழியே
கண்ணீராய் கரைந்தபின்
பிறக்கிறது
ஒரு புது அழகிய ஆன்மா!

சந்தித்து சந்தித்து
நெருக்கம்
அதிகமாக அதிகமாக
அழகாய்...
பேரழகாய்...
முடிவில்லா விண்ணாய் வியாபித்து
விசுவரூபெமெடுக்கிறது
காதலியின் திருமுகம்!

நம்மைக் கண்டு
யார் கவிஞனாகப் போகிறார்
என்ற
பேரார்வத்தோடு
ஒவ்வொரு நாளும்
நிலாவும், விண்மீன்களும்
இருளைத் துளைத்து
ஒளியைப் பொழிகின்றன!

எவன் சொன்னது
வாழ்க்கை
அர்த்தமற்றதென்று
அழகற்றதென்று!

■ சி. சுந்தரமூர்த்தி

# கட்டியக்காரனின் தற்கொலை

மெழுகுவர்த்திகள் அணைந்துவிட்டன
க்ளோரோஃபாம் போல் இருள் சூழ்ந்தது
தன் மரண வாக்குமூலம் எழுதியது பிரபஞ்சம்
கட்டியக்காரன் தற்கொலை செய்துகொண்டான்.

இயந்திரங்களின் மந்திர இசை
விஷக்காற்றுப் புயல்
ஸ்டீமரில் சிம்பாஞ்சி
துவக்கத்தில் முடிவுரை
மரணத்தில் சிருஷ்டி
கட்டியக்காரனின் தற்கொலை.

கட்டியக்காரனின் விகட சிரிப்பில்
மண்டை ஓடு படீரென வெடித்தது
பசி சோறாக்கிக்கொண்டது
அன்னப்பறவை ஆகாயத்தைத் தொட்டது.

கட்டியக்காரனின் சோகம்
சமுத்திரத்தில் பிரளயாக்கினி
பூகம்பத்தில் ஃப்ரூட் சாலட்
ஆனால்
மெழுகுவர்த்திகள் மீண்டும் ஒளிர்ந்தது
மரணவாக்குமூலம் எரிந்து . . .

■ கவிஞர் ஸ்ரீஸ்ரீ
தமிழில் : பரதேசி

# புரவலர்கள்

**பா. கர்ணன் - க. கௌரி**
குடும்பத்தினர், தி. நகர்

தந்தையார் திரு. **கந்தையா** நினைவாக
**க. ராசரத்தினம்**, அண்ணா நகர்.

K.K. என்றழைக்கப்படும்
K. **கிருஷ்ணமூர்த்தி,** திருவான்மியூர்

வழக்கறிஞர் **இரா. சந்திரசேகரன்**, M.L.,
டாக்டர் **ச. தீபா பிரியவதனா,** M.B.B.S.,
குடும்பத்தினர், வேளச்சேரி.



படிப்பகம்

www.padippakam.com

# சிம்மாசனம்

■ கந்தர்வன்

காலையில் போயிறங்கியவுடன் புது வீட்டுக்காரன் என்னைப் பார்த்துப் பெருமையோடு சொன்னது, "பாருண்ணே இந்த ஊர்லெயே நானும் ஒரு வீட்டைக் கட்டிப்பிட்டேன்" அவன் எனக்கு சித்தப்பா மகன். ரொம்பப் பிரியமான தம்பி. 'இந்த ஊர்லெயே' என்று அவன் பொங்கப் பொங்கச் சொன்னதன் அர்த்தம் வெகு ஆழமானது. எங்கள் அளவில் நீண்ட சரித்திரம் புதைந்தது.

இங்கிருந்து ஒருமணி நேர பஸ் பயணத்திலிருக்கிறது எங்கள் கிராமம். நாங்கள் பால்யத்திலிருந்தபோது இந்த ஊர் எங்கள் கனவூர். இரண்டு டீக்கடைகளும் மூன்று மளிகைக்கடைகளும் மட்டுமே இருந்த ஒரு தெருவை நாங்கள் கிராமத்தில் கடைத்தெரு என்று அழைத்துக்கொண்டது எவ்வளவு அபத்தம் என்று இந்த ஊர் வந்து தெரிந்துகொண்டோம். கிராமத்தில் கல்யாணமென்றால் இந்த ஊருக்கு வண்டி கட்டி வந்து காய்கறி வாழை இலைக்கட்டு எல்லாம் வாங்கி வருவார்கள். மேளம் இங்கிருந்துதான், மைக்செட் இங்கிருந்துதான், கல்யாண மாலை இங்கிருந்துதான் என்று சுப காரியங்கள் நடக்கும்.

கிராமத்திலிருந்து இந்த ஊருக்கு நடந்தே வருவது என்றிருந்தது; அப்புறம் போக்கு வண்டிகளில் ஏறிப்போவது; அப்புறம் மூக்கு வைத்த பஸ்; அப்புறம் சப்பை பஸ் என்று போக்கு வரவு விரிவானபோதும் குறுகிக்கிடந்த போதும் இந்த ஊருக்கு வருகிற யாரும் ஒரு வார முன்பே சட்டை வேஷ்டி வெளுத்துத் தயார் செய்து அந்த நாட்கள் பூராவும் பயணக் கனவுகளில் இருந்தபடி வந்து சேருவோம். இந்த ஊருக்கு வந்து திரும்பியதிலிருந்து ஒரு வாரத்திற்கு இங்கே பார்த்தது ருசித்ததையாய் பேசித்திரிவோம் திண்ணைகளிலும் வயல் வரப்புகளிலும்.

ரொம்ப முக்கியமாக இந்த ஊர் அரண்மனையைப் பார்த்ததை அளந்துவிடுவோம். ஓலைக்கூரையும் மண் சுவருமானவைகளை நாங்கள் வீடுகள் என்றோம். அவைதான் கிராமத்தில் அதிகம். நாலே நாலு ஓட்டு வீடுகள்; ஒரே ஒரு காரை வீடு. அரண்மனை என்றாலே வாய் அகன்றுவிடும் எல்லோர்க்கும். இந்த ஊர் அரண்மனையைச் சுற்றி இரும்பு ஈட்டிகள் அடைத்த வெளிப்புறம். மேல் பக்கம் அகழி. உள்ளே நுழைந்தால் அண்ணாந்து பார்க்கும்படி மாடங்கள் கூடங்கள். எத்தனை தடவை இந்த ஊருக்கு வந்து போனாலும் அரண்மனையைச் சொல்லி ஆரம்பிப்போம்; அரண்மனையைச் சொல்லி முடிப்போம்.

சென்னை சேலம் என்று உத்தியோகமாய்த் திரிந்து கொண்டு இந்த ஊரில் வந்து இறங்கும் ஒவ்வொரு முறையும் அடுத்த பஸ்ஸைப் பிடித்து கிராமத்திற்கு ஓடுவதில்தான் புத்தி அலையும். நடந்த இடங்கள் அலைந்த தெருக்களை ஆற அமரப் பார்த்து அசைபோட்டு ரொம்ப வருஷங்கள் ஆகிவிட்டன. இந்த முறை அந்த அவசரமில்லை. கிராமத்திலிருந்து அநேகமான உறவுக்காரர்களைத் தம்பியின் புது வீட்டில் வைத்துப் பார்த்தாயிற்று. ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு சாயங்காலம் போல் இப்படியே சேலம் போய்விடலாம்.

பத்து மணி வாக்கில் நடக்க ஆரம்பித்தேன். வெயில் காந்தியது. இந்த ஊர் வெயிலுக்குள் தகதகவென்று தெரியும். ராத்திரியிலும் வெயிலடிக்கிற மாதிரி உணரலாம். கண்மாயும் குளங்களும் அடுத்தடுத்துத் தெரியும். ஆனால் பெரும்பாலான காலம் பூராவும் அவை காய்ந்தும் வெடித்து விரிவோடியும் கிடக்கும். வெயிலுக்குள் வெகு உற்சாகமாக நடக்கத் துவங்கினேன். பிழைப்பிற்காக எந்த ஊர் போயிருப்பினும் இந்த ஊர்க்காரன் என்பதன் அடையாளம் வெயிலுக்குள் வேகு வேகென்று உற்சாகமாய் நடப்பது. அப்படி நடப்பதால்தான் எப்படியோ மக்கள் இங்கு பிழைத்துக்கிடக்கிறார்கள்.

ராதா தியேட்டர் வந்தது. எட்டு வரை கிராமத்தில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் சைக்கிள் எடுத்து வந்து முதல் ஷோ






படிப்பகம்

www.padippakam.com

இங்கேதான் பார்ப்போம். முடிந்ததும் மைதீன் பாட்சா கடையில் புரோட்டா. இரண்டாவது ஷோ முருகன் தியேட்டரில். விடிய நாலு மணிக்குக் கால் முட்டிகள் வலிக்கப் போய்ச் சேர்வோம்.

சுந்தரம் ஆஸ்பத்திரியைக் கடக்கும்போது குபுக்கென்று கண்ணீர் வந்தது. எத்தனை ஆண்டுகளானால் என்ன. ஒரு விடிகாலையில் அப்பா இந்த ஆஸ்பத்திரியில் இறந்து நாங்கள் தெருவில் கிடந்து அரற்றி அழுதது ஞாபகம் வந்தது. எப்போது இதைக் கடந்தாலும் கேவலோடுதான் போக வேண்டியுள்ளது. தூரத்தில் ஹாஸ்டல் தெரிந்தது. 9-லிருந்து 11-ஆம் வகுப்பு வரை இதில் தங்கித்தான் படித்தேன். மூன்று வருடங்கள் இதனுள் ஒரு ஜிலு ஜிலு வாழ்க்கை.

ஹாஸ்டலின் சுற்றுச்சுவரும் அதை ஒட்டி ஏராளமான முருங்கை மரங்களும் அப்படியே இருந்தன. முருங்கைகள் அந்தக் கால முருங்கைகளாக இருக்க முடியாது. வெட்டுப்படவும் உடன் தழைத்து மரமாக வளரவும் வரம் வாங்கி வந்தவை. இந்த வறண்ட பூமியின் பசுமைச் சின்னங்கள் முருங்கையும் வேம்பும்தான். சுற்றுச் சுவரின் மேற்கில் வந்து நூலகத்திற்கு எதிரில் நின்று பார்த்தேன். இந்தச் சுவர் இன்னும் ஒரு பங்கு உய'ரமாகக் கட்டப்பட்டிருந்தால் நான் இப்போதிருப்பதை விட நல்ல உத்தியோகத்திலிருந்திருக்கலாம். இரவு 9 மணிக்கு மேல் நாங்கள் முப்பது பேருக்கு மேல் இந்தச் சுவற்றில் எளிதாக ஏறிக் குதித்து அடிக்கடி இரண்டாம் ஆட்டத்திற்குப் போய் படிப்பும் எடுத்த மதிப்பெண்களும் போதவில்லை என்று தேங்க வைத்தது இந்தச் சிறிய சுவர்தான்.



பூக்குளம் ரெத்தினவேலு ஞாபகத்தில் வந்தான். அவன் என்னைவிட நாலு வயது மூத்தவன். அவனோடு நடக்கையில் எனக்குப் பெரியண்ணன் போலவோ சித்தப்பா போலவோ தெரிவான். இந்த ஹாஸ்டலில் நாங்கள் ஆறு பேர் ஒரு அறையில். இரவுப் படிப்பிற்காக எல்லோருக்குமாய் ஒரு 60 வாட்ஸ் பல்பு எரியும். விளக்கு வெளிச்சத்தில் அவனுக்குத் தூக்கம் வராது. வெகு நேரம் புரண்டு பார்த்துவிட்டுப் பக்கத்தில் படித்துக்கொண்டிருப்பவனைக் கூப்பிட்டுச் சொல்வான், "முனியாண்டி அந்தா அந்த என் இங்கிலீஷ் புஸ்தகத்தை எடு." எடுத்துக் கொடுத்ததும் பிரித்து ஐந்தே நிமிடங்கள் உன்னிப்பாய்ப் படிப்பான். ஆறாவது நிமிடம் தூங்கிவிடுவான். அவனுக்குத் தூக்க மாத்திரை இங்கிலீஷ் புத்தகம்தான். இன்றைக்கிருக்கும் உடல் தொந்தரவுகளுக்கு அவனும் ஒரு காரணம். சிகரெட் பழக்கம் அவன் அளித்த தீக்கொடை.

தாத்தா ஞாபகத்திற்கு வந்தார். எட்டிற்கு மேல் கிராமத்தில் படிக்கப் பள்ளி இல்லை என்றானபோது தாத்தா தான் என்னை இந்த ஊரில் கொண்டு வந்து பள்ளியிலும் ஹாஸ்டலிலும் சேர்த்தார். அம்மாவைப் பெற்று அவரடைந்த துயரங்களில் ஒன்று என்னை வெகு காலம் சுமந்தது. அவர் மட்டும் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திராவிட்டால் காடும் மாடும் கம்பும் வரகும் என்று இயற்கையோடியைந்த வாழ்வு கிட்டியிருக்கும். படிக்காத தாத்தாவுக்கு எப்படி அப்படி ஒரு முனைப்பு வந்ததோ, ஒரே குறியாய் நின்று என்னை இங்கே சேர்த்தார். மூட்டை மூட்டையாய் புஞ்சை நஞ்சை தானியங்களை ரூபாய் நோட்டுகளாக்கிக்கொண்டு வந்து பள்ளிக் கட்டணத்தையும் விடுதிக் கட்டணத்தையும் செலுத்தினார். உழைத்த களைப்பு எப்போதும் முகத்தில் அப்பியிருக்கும்.

தாத்தா இந்த ஊருக்கு என்னை அழைத்து வந்து பள்ளியில் சேர்த்தபோதும் பிறகு விடுதியில் சேர்த்தபோதும் அவர் செய்கைகள் விநோதமாயிருந்தன. குறிப்பாக விடுதி இருந்த இடமும் பள்ளி இருந்த இடமும் அவருக்கு திருப்தியாயில்லை. பதட்டமாயிருந்தார். விடுதிக்கும் பள்ளிக்கும் நடுவில் அரண்மனை இருந்தது; அவர் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே மாணவர்கள் புத்தகங்களோடு சாலை வழியே போகாமல் அரண்மனையின் தெற்கு வாசலில் நுழைந்து பள்ளிக்குப் போனார்கள்.

"எங்களுக்கு இந்த அரண்மனை கோவிலப்பா. இந்தப் பையங்க பயமில்லாம சர்வ சாதாரணமா அரண்மனைக்குள்ளெ நொழைஞ்சு போறாங்க. என்ன அவசரமிருந்தாலும் நீ இந்த ரோடு சுத்திப் போய்யா தெனமும் பள்ளிக்கூடத்துக்கு" என்றார்.

எனக்கிருந்த விடுதிச் சூழ்நிலை நகரச் சூழ்நிலை மலைப்பில் தாத்தா சொல்லிக்கொண்டிருந்த அரண்மனைப் பிரதாபங்கள் அப்போது அவ்வளவாய் உறைக்கவில்லை.

ஆனால் கால்பரீட்சை லீவுக்காக கிராமத்திற்குப் போயிருந்தபோது தாத்தா மிகவும் பதற்றத்தோடு கேட்ட முதற்கேள்வி 'ஏய்யா அரண்மனைக்குள்ளெ கடந்து பள்ளிக்கூடம் போறதில்லையே நீ. சுத்து ரோடிலெதானெ போற'. நான் அவரை சங்கடப்படுத்தாமல் 'ஆமா' என்றதும் தனக்கான அரண்மனை பக்தியை வெகுநேரம் வெளியிட்டார் தாத்தா.

தாத்தாவின் அப்பா காலத்தில் ஒரு முறை ராஜா எங்கள் கிராமத்தின் வழியாகப் படவூர் காட்டிற்கு வேட்டையாடச்



படிப்பகம்

www.padippakam.com

சென்றாராம். யானைகள் குதிரைகள் படை வீரர்கள் அதிகாரிகள் என்று ஒரு சைன்யமே உடன் வந்ததாம். எங்கள் வீட்டில் நின்று கொண்டிருந்த இரண்டு ஆடுகளையும் நான்கு கோழிகளையும் பிடித்துக்கொண்டுபோய்விட்டார்கள். இரண்டு நாள் சமையலில் நூற்றி ஆறு ஆடுகள் எண்பத்தெட்டுக் கோழிகள் வெட்டப்பட்டன. எங்கள் வீட்டு வைக்கோற்படப்பில் பாதியை அள்ளிக்கொண்டு போனார்கள். எங்கள் பாட்டி உட்பட நூற்றிமுப்பது பேரை சைன்யத்தோடு வந்த கால் நடைகளுக்காகப் புல்வெட்டக் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு போனார்கள்.

ராத்திரி ஆனதும் வராத பெண்களை வாயில் துணி வைத்து அடைத்துத் தூக்கிப்போய் விடியற்காலையில் காயங்களோடு சிதைத்து அனுப்பினார்கள். இரண்டு நாள் கழித்து ராஜாவும் சைன்யமும் சென்ற பிறகு ஊர் "கொட்டிப்பெருக்கிக் கொள்ளை நாடாய்க் கிடந்தது" என்றார்.

நகரில் அந்த அரண்மனைப் பக்கம் எந்த ஒரு கிராமத்தாளும் ஒத்தையில் போக முடியாது. கூப்பிட்டு நாள் பூராவும் கடினமான வேலைகளைப் பார்க்கச் சொல்வார்கள். கட்டிட வேலைகளுக்கு மண் அள்ளுவது சுண்ணாம்பு சுமப்பது என்று முதுகு ஒடிய வேலை வாங்குவார்கள்.

வண்டி மாட்டோடு மாட்டிக்கொண்டால் ஏழு ஊர்க் குறுங்களஞ்சியங்களில் பேஷ்காரர்கள் சம்சாரிகளிடம் அடிதண்டமாய் வசூல் பண்ணி வைத்திருக்கும் நெல் மூட்டைகளை அரண்மனைக் களஞ்சியத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கும்படி சிட்டை கொடுத்தனுப்புவார்கள். "ஒருபடி நெல் குறையக்கூடாது. ஒரு நெல் சிந்தப்படாது" என்று அதிகாரி சொல்லும்போதே அடிவயிறு கலங்கும்.

"இப்பொதான் ராஜா ஆட்சியில்லையே. எதுக்கு பயப்படுறீங்க தாத்தா?" என்று கேட்டதற்கு சொன்னார், "அப்படியெல்லாம் சொல்லாதே அரண்மனைனா ஒரு பயமிருக்கணும். மகராஜா நாம கும்பிடுற சாமிகள்ள ஒருத்தர். இன்னும் ஏழேழு தலைமுறைக்கு பயப்படுறாப்ல ரொம்ப ரொம்ப நடந்திருக்குப்பா."

கீழ்த்திண்ணையில் உட்கார்ந்து காய்ந்த வெற்றிலைச் சருகுகளை நாலைந்து முறை தொடையில் தடவி சேர்மானங்களோடு வாய்க்குள் தள்ளிவிட்டால் உற்சாகமாய்ப் பேசுவார். "இந்த கிராமமாகட்டும் சுத்துவட்ட கிராமங்களாகட்டும் எப்பேர்ப்பட்டவன் வீட்லெயும் சாயங்காலம் ஆறுமணிக்குத்தான் ஒரு வேளை சோறும் கொழம்பும். பெரிய ஜாதிகள்ள அமாவாசைக்கு மத்தியானம் சமையல் உண்டு. ஆனா அரண்மனையிலெ மத்தியானச் சாப்பாட்டிலெ ஐம்பத்தோரு வகை எலையிலெ இருக்கணுமாம் கூட்டு பொறியல் வடை பாயாசம் ஆடு கோழி புறானு.

இங்கெயெல்லாம் குடிதண்ணிக்கு மூணு மைல் நாலு மைல் நடக்குதே நம்ம பொம்பிளையாளுக. மகராஜாவுக்கு எப்டித் தெரியுமா? தெக்குத் தெரு நடராசன் வகையறா அரண்மனையோட ரொம்ப நெருக்கம். அவருதான் உள் கதைகளையெல்லாம் பெருமையா சொல்வாரு. மகராஜா கால் கழுவ மூலைக்கெணத்துத் தண்ணி, கைகழுவ மொடக்கால் கெணத்துத் தண்ணி, குளிக்க நல்லூரணித் தண்ணி. இன்ன செயலுக்கு இன்ன தண்ணினு இருக்காம். தண்ணியை சரி பார்க்க மட்டும் கட்டா கட்டியா அஞ்சுபேர் திரிவாகளாம்."

ஒரு நாள் சொன்னார் நீ இப்ப சின்னப்புள்ளை இல்லெ. ஒங்கிட்ட இப்பொ சொல்லலாம். ராஜாக்க புலிப்பால் குடிக்கணும்னு நெனைச்சுட்டாக்க குடிக்காம விடமாட்டாக. தெசைக்கு நூறுபேர் தீப்பந்தங்களோடவும் வில் அம்போடவும் பறந்துபோய் விடிகாலம்பர புலிப்பாலோட மகராஜாவோட சயன அறை வாசல்ல வந்து நிப்பாக; நிக்கணும். அப்படித்தான் பொம்பளைக விசயத்திலயும்.

ஒரு நா மகராஜா மாடத்திலெ நின்னு காலையிலெ பாக்குறாரு. புல்லுக்கட்டோட பொம்பிளை ஆளு ஒண்ணு வாட்டசாட்டமா நடக்குது தெருவில. 'கொண்டா அவளை'னுட்டாரு. கொண்டாந்தாங்க. புல்லுக்கட்டு நாச்சியார் அரமனைனு மூலைக் கெணத்துப் பக்கம் இப்பவும் இருக்கு. ஒருநா விடிகாலம்பர மகராஜா மாடத்திலே நிக்கிறாரு. ஓலைக்கட்டை சொமந்துக்கிட்டு ஒரு பொண்ணு நடக்குது. 'அவளையுங் கொண்டா'னுட்டாரு. புல்லுக்கட்டு நாச்சியார் அரமனைக்குப் பக்கத்திலெயே ஓலைக்கட்டு நாச்சியார் அரமனைனு இருக்கு. இன்னும் இந்த சங்கதிக எம்புட்டோ அதுக்குத்தான் சொல்றென் அரமனைனா ஒரு பயம் வேணும்னு.

சென்னையில் வேலை பார்த்தபோது ஒருவர் என் ஊர்ப் பெயரைக் கேட்டார். நான் சொன்னதும் "ஊரு இன்னும் அமுக்குப் புடிச்சுக் கெடக்குமே. ராஜாக்க இருந்த ஊர்களுக்கு நவீனமா எதுவும் வராது. அவை பாவவயல்கள்; விளைவதில்லை; விருத்தியாவதுமில்லை". அவர் இந்த ஊரோடு ராஜாக்கள் ஆண்ட வேறு சில ஊர்களையும் சொன்னார். "கோயமுத்தூர் திருப்பூர் மாதிரி இதுகள்ள எந்த ஊராச்சும் வளந்ததா?" என்று கேட்டார். அவர் சொன்னது சரியென்று பட்டது அப்போது.

ஹாஸ்டலின் முன் வாசலுக்கு வந்தேன். இப்போது அது ஹாஸ்டல் இல்லை. விவசாயத்துறை அலுவலகமாக மாறி இருந்தது. எதிரே அரண்மனை தெற்கு வாசலில் ஒரு காவலாளி நின்றுகொண்டிருந்தார். தாத்தா பயமுறுத்திய தெற்கு வாசல் அதுதான். திரும்பி சாலையிலேயே கிழக்கே பார்த்து நடந்து திரும்பியதும் அரண்மனை வாசல் வந்தது. இடது ஓரமாயிருந்த கோவில் பிள்ளையார் ஒற்றைத் தெய்வமாய் கறுகறுவென்று எண்ணை மினுமினுக்க அரசமரக் காற்று வாங்கி உட்கார்ந்திருந்தார்.

அரண்மனை வாசலில் மேடைபோடப்பட்டிருந்தது. ஒரு கட்சியின் கொடிகள் சாலைகளில் பறந்தன. நாங்கள் படித்த காலத்திலேயே அரண்மனை வாசல் பற்றிய பயத்தையும் புனிதத்தையும் ஓய்த்துவிட்டன அரசியல்கட்சிகள். அரண்மனை வாசலுக்கு எதிரே மூன்று திசைகளிலும் பெரிய சாலைகள். ஆயிரக்கணக்கான மக்களை அவை உள்வாங்கிக்கொள்ளும். இன்று மாலையும் ஒரு கூட்டம் நடக்கப்போகிறது.


படிப்பகம்

www.padippakam.com

படித்த பள்ளியை நோக்கித் திரும்பி நடந்தேன். மஞ்சள் வர்ணத்தின் மேல் அழுக்குப் படிந்து தெரிந்தது சுவர். நுழைந்தவுடன் கண்ணில்பட்ட பள்ளி அலுவலகம் மாறாமல் அப்படியே இருந்தது. என் காலத்தைய பள்ளி மாணவர் தலைவன் ராமசாமி பெயர் வரிசையில் இருந்தது சிலிர்ப்பை உண்டுபண்ணியது. நடமாடிய ஆசிரியர்களில் பழையவர் எவரையும் காணோம். ஒருவர் என்னிடம் வந்து "யார் என்ன வேணும்" என்றார்.

"பழைய மாணவர்" என்றதும் நிறைந்த புன்னகையோடு "உள்ளெ போய்ப் பாருங்க" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். நடந்துகொண்டிருந்தபோது மூக்கில் சுள்ளென்று ஏறியது அந்த வாசம். பந்தலில் சிவப்பும் வெள்ளையுமாய்க் கொத்துக் கொத்தாய்ப் பூக்கள். அதே ராட்சச மணம்.

பந்தலில் இந்தப் பூங்கொடி இல்லாமல் வேறுகொடி வளர்ந்திருந்தால் இப்போதிருப்பதைவிட நல்ல உத்தியோகத்திலிருந்திருக்கலாம்.

வகுப்பு நடக்கையில் இந்தப் பூ வாசம் காற்றில் ரெண்டு நிமிடங்களுக்கொருமுறை மூக்கைத் தொட்டு உடல் பூராவும் பரப்பிவிட்டுப் போகும். அதை ஒட்டி நூறு விடலைக் கனவுகள் வரும். கட்டுக்கடங்கா வாசம் போலவே கனவுகளும் அடங்காமல் ஓடிப் புரளும். இப்போதும் மணக்கிறது. உடம்பை உலுக்கிக்கொண்டு திரும்பிவிட்டேன். மீண்டும் அரண்மனை வாசலுக்கு நடந்தேன்.

பதினொண்ணு அரைப் பரீட்சை லீவில் போயிருந்தபோது தாத்தாவிடம் சொன்னேன்

"தாத்தா ராஜாவைப் பாத்தேன்"

"மகராஜானு சொல்லு"

"மகராஜாவைப் பாத்தேன்"

"அவரு உக்காந்திருந்தபோது பாத்தயா. நடந்து வரும்போது பாத்தயா"

"உக்காந்திருந்த போது"

"சிம்மாசனத்திலிருந்தபோதா"

"ஆமா. எலெக்ஷன்ல நிக்கிறார்ல. ஜனங்கள வரச்சொல்லி தரிசனங்குடுத்தாரு. ஸ்பீக்கர்ல சும்மா சொல்லிக்கிட்டே இருந்தாக. நாமளும் போவோம்டானு நாங்க ஆஸ்டல் பயக அம்பது பேரு போய்ப் பாத்தோம்."

"அடடா, ராஜ உடை தலைக்கிரீடம் இடுப்பிலெ வாளோட உக்காந்திருந்தாரா?"

"சாதாரணமா பேண்ட் சட்டையோட உக்காந்திருந்தார்."

"சிம்மாசனம் எப்டி இருந்துச்சு"

"ஆமா அதுதான் ரொம்ப பயமுறுத்துச்சு. ரொம்ப ஒசரம். பளபளனு கைப்பிடிகளும் தந்தத்திலெயும் தங்கத்திலெயும் எழைச்ச மாதிரி அதுதான் கம்பீரமாயிருந்துச்சு. எங்க பயலுக பத்துப்பேரை தரையிலெ விழுந்து கும்பிட வச்சிருச்சு சிம்மாசனம்."

"பாக்காம ஆயிரம் பேசலாம்ப்பு. பாத்ததும் பாரு பயம் வந்திருச்சி."

அந்த முழுப் பரீட்சை லீவில் தாத்தா கேட்டார், "மகராஜா எம்எல்ஏ எலெக்ஷன்ல தோத்துட்டார்னு சொல்றது நெசமா. எங்க வயசு ஆளுகளால நம்ப முடியலைப்பா."



"ஆமா தாத்தா. சைக்கிள்ள காலையிலெயும் சாயங்காலத்திலெயும் வீடு வீட்டுக்குப் பால் ஊத்திக்கிட்டிருந்த ஒரு இளவயசுக்காரர்ட்ட தோத்துட்டாரு."

"மகராஜா தோத்திருக்கப்படாதுப்பா. நாட்டிலெ பெரிய மனுஷன் சின்ன மனுஷன் வித்தியாசம் இல்லாமப் போய்க்கிட்டிருக்கு. இன்னும் என்னென்ன கண்றாவிகளைப் பாக்கணுமினு இருக்கோ."

அரண்மனைக்குள் நுழைகையில் சொன்னார்கள், தொல்லியல்துறை ஏற்பாட்டின்படி ரெண்டு ரூபாய்க்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே போகும்படி. எல்லாம் இப்போது வந்திருக்கும் முறைகள் போல. ரெண்டு ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கிக்கொண்டு நடந்தேன். கயிறு கட்டிப் பாதை அமைத்திருந்த வழியில் ஏறினேன். மேல் தளத்திற்குச் சென்றது பாதை. உலகப் புகழ்பெற்ற சிருங்கார ரஸ சித்திரங்கள் மேற்கு மற்றும் தெற்குச் சுவர்களில் சற்றே வண்ணம் கலைந்து இருந்தன.

கீழ்த்தளத்தில் ராஜாக்களின் பட்டுப் பீதாம்பர உடைகள் கிரீடங்கள் உடை வாள்கள் குத்து வாள்கள் வில் அம்பு ஐம்பதுபேர் வந்தாலும் அசைக்க முடியாத கஜானாப் பெட்டி என்று பார்த்துக்கொண்டே போகையில் தென் மூலையில் சிம்மாசனம் இருந்தது. அதன் மேல் தோல் கிழிந்து தொங்கியது. உள்ளே இருந்த பஞ்சு அழுக்குப் பொதிகளாய் வெளியே துருத்திக் கிடந்தது. கிராமத்து சிறுவர்களும் பெரியவர்களும் சட்டை கூட அணியாதவர்களும் அதில் ஏறி உட்கார்ந்துவிட்டு இறங்கினார்கள். காவலாளிகள் அந்த இடத்தைக் காபந்து பண்ணவும் ஒழுங்காக்கவும் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

தாத்தா இல்லை. காலமாகி 20 வருடங்களாகின்றன. இருந்தால் இதைப் பார்த்து என்ன சொல்வாரோ.


படிப்பகம்

www.padippakam.com

நூல் அறிமுகம்

■ கமலாலயன்


# (சிலுவை) ராஜ் சரித்திரம்

கன்னடம், மராத்தி, பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு சமீப காலமாக சுயசரிதை பாணியிலான தலித் நாவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. சித்தலிங்கய்யாவின் 'கவர்மெண்ட் பிராமணன்', வசந்த் மூன் எழுதிய 'ஒரு தலித்திடமிருந்து...' போன்றவை உதாரணங்கள். இவை நமக்குத் தந்த வாசிப்பு அனுபவம் புதிது. இதே பாணியில் தமிழில் பாமா எழுதிய 'கருக்கு' மிக வெற்றிகரமான படைப்பு. இப்போது ராஜ்கௌதமன் எழுதிய 'சிலுவைராஜ்சரித்திரம்' வந்திருக்கிறது.

இராமநாதபுரம் ஜில்லா, திருவில்லிப்புத்தூர் தாலுகா, வத்திராயிருப்பு பிர்காவைச் சேர்ந்த புதுப்பட்டியில் ரோமன் கத்தோலிக்க வடக்குத் தெருவில் ராக்கம்மா பாட்டியின் குடிசையில் பிறந்தவன் சிலுவைராஜ். தலித் கிறிஸ்தவக் குடும்பம். அப்பா பட்டாளத்து வீரர். விவசாயக் கூலித் தொழில் செய்து பிழைக்கிற மக்களின் கிராமம் அது. சிலுவைராஜ்படித்து வளர்ந்து பட்ட மேற்படிப்பும் முடித்தபின் வேலை கிடைக்காமல் படுகிற வரலாறுதான் இந்த நாவலாக விரிந்திருக்கிறது.

சாதீயத்தின் கோரப்பிடி தமிழ்ச் சமூகத்தில்-தலித் கிறிஸ்தவ மக்கள் திரளின் மீது எத்தகைய வீச்சுடன் இறுகி நசுக்கிக் கொண்டிருக்கிறது என்பது இந்த நாவலில் பல்வேறு பாத்திரங்களின் அனுபவங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்தவக் குடும்பத்து மனிதர்களின் வாழ்க்கை முறைகள், திருமணம்-திருவிழாச் சடங்குகள், வழிபாட்டு நெறிகள், உணவுப் பழக்கங்கள், சமகால அரசியல்-சமூக மாற்றங்கள், தனி மனித உணர்வுகளின் மீது அவை ஏற்படுத்திய/ஏற்படுத்தத் தவறிய தாக்கங்கள்-என்று சின்னச் சின்ன நுணுக்கமான விஷயங்கள் கூட ஒன்றுவிடாமல் வடிவம் பெற்றுள்ளன. மாணவப் பருவத்து வாழ்க்கை-பள்ளி, கல்லூரி, ஹாஸ்டல்-இவற்றில் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் நிகழ்ந்த விதமாய் அப்படியே கண்முன் விரிகிறது.

சிலுவைராஜ் ஒரு விளையாட்டுத்தனமான பையன். விநோதமான, ஏன், வக்கிரமான சில இயல்புகள் அவனுடன் கூடப் பிறந்தவை-படிப்பதில் மட்டும் எல்லையற்ற ஆர்வம். பாடப்புத்தகங்களோடு, பிற இலக்கிய நூல்களையும் நூலகங்களுக்குப் போய் வாசிக்கிறவன். அவன் படிப்பில் காட்டும் திறமை மட்டுமே அவனது பலம். ஆனால் தலித் கிறிஸ்தவன் என்ற சாதி அடையாளம் அவனது முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியிலும் குறுக்கே நிற்கிறது. இந்த நாவல் முழுக்க சிலுவைராஜ்மட்டுமே வியாபித்திருக்கிறான்-தமிழ் சினிமா கதாநாயகன் மாதிரி. எண்ணற்ற பிற பாத்திரங்கள்; முடிவே இல்லாமல் போய்க்கொண்டிருக்கும் நிகழ்ச்சிப் பின்னல்கள்.




கிறிஸ்தவ மதத்திலும், அந்த மத நிறுவனங்களிலும் நிலவுகிற சாதீய ஏற்றத்தாழ்வுகளை இந்த நாவல் மிகத் தெளிவாக வெளிக்கொணர்ந்திருக்கிறது. ஒரு தலித் கிறிஸ்தவ இளைஞனின் கனவுகளை சாதீயம் எப்படி ஒவ்வோர் அணுவிலும் எதிர்வந்து மறித்துக் கருக்கிவிடுகிறது என்பது படிப்பவர்களை அதிர வைக்கும்.

சிலுவையின், சக மனிதர்களின் அன்றாட வாழ்க்கை அநுபவங்கள்-சினிமாப் பார்ப்பது, சாப்பிடுவது, குளிப்பது, சைட் அடிப்பது-இன்ன பிறஅம்சங்கள் அணு அணுவாக அலுப்பூட்டுகிற அளவுக்கு விவரிக்கப்படுகின்றன. ஒரு வித எள்ளல் தொனி நாவல் முழுக்க விரவிக் கிடக்கிறது. ஆண்-பெண் உறவுகள் சார்ந்த பல அனுபவங்கள் நாவலில் உண்டு. ஆனால் அவை பெரும்பாலும் பூடகமாகவே சொல்லப்படுகின்றன. கிளுகிளுப்பூட்டுகிற நடையில் எந்த இடத்திலும் சித்தரிக்காமல் கவனமாகக் கையாண்டிருக்கிறார் ஆசிரியர். எல்லாச் சம்பவங்களின் போதும் சிலுவைராஜ்மட்டும் எந்தத் தவறும் செய்யாமல் நழுவிவிடுகிறான். நிஜமான பெண்கள் அல்ல; சினிமாக்களின் நிழல் பெண்களே போதும் அவனுக்கு என்று பலமுறை சொல்லப்படுகிறது. அதே சமயம் சக மனிதர்கள் பலரும் எந்த வாய்ப்பையும் தவற விட்டுவிடாமல் பயன்படுத்திக்கொள்ளுகிறவர்களாகவே காட்டப்படுகிறார்கள். இது எந்த அளவிற்கு நடைமுறையில் சாத்தியம் என்ற கேள்வி வாசிப்பவர்களுக்கு எழாமல் போகாது.

மொழி நடை மிகச் சரளமானது. கொச்சையான வார்த்தைப் பிரயோகங்கள் அடங்கிய பேச்சு நடையே பிரதானமாகக் கையாளப்பட்டுள்ளது. சாதி, அம்மா-அக்கா, உடல் உறுப்புகள் சார்ந்த வசைச்சொற்கள் சர்வ சாதாரணமாகப் பக்கத்திற்குப் பக்கம் புழங்கி வருகின்றன.

நாவலில் இலக்கிய நயமிக்க பகுதிகளில் சற்று வித்தியாசமான மொழி நடை வருகிறது. ஒரு கோடை மழை நாளில், ஆலங்கட்டிகள் குவிந்து அதனுள் சமாதியாகிவிடுவோமோ என்ற அச்சத்துடன், மழையையும்-புயல் காற்றின் வீச்சையும் சிலுவை எதிர்கொள்கிற காட்சி ஓர் உதாரணம். வேறு சில இடங்களிலும்



படிப்பகம்

www.padippakam.com

இயற்கைக் காட்சிகளோடும், நிகழ்வுகளோடும் சிலுவை ஒன்றி விடுகிறபோது அவன் அடைகிற உன்மத்த நிலை மிக அழகாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. முற்றிலும் வேறான ஆளாக சிலுவை அந்த நேரங்களில் வடிவம் கொள்கிறான். அபூர்வமான தருணங்களில் மனிதர்கள் மகத்தானவர்களாகத் தென்படுகிறார்கள்- அது மாதிரி.

சிலுவைராஜ் தனது சக மனிதர்களுக்காகக் கடைசிவரை ஒரு துரும்பையும் கிள்ளிப்போட முயலாத சுயநலக்காரனாகவே வருகிறான். அவனுக்கு வேலை இல்லை எனும்போது கசப்பும்-வெறுப்புமிக்க மனநிலையில், தாழ்வு மனப்பான்மையில் வெந்து புழுங்குகிறான். அவன் தனது மக்களிடம், சக தோழர்களிடம் பழகுகிற விதம் இவன் படித்த அத்தனை பெரிய இலக்கியங்களிலிருந்தும் கற்றுக்கொண்ட பண்புதான் என்ன என்ற கேள்வியை எழுப்புகிறது. உதாரணமாக இரவில் தனியாகப் போகப் பயப்படுகிற ஒருவனுக்கு வழித்துணையாகப் பேசியபடி நடந்துபோகக்கூட தயாராய் இல்லாதவனாகவே சிலுவை இருக்கிறான். அதே சமயம் குருசாமி டெய்லர் போன்றவர்களை தினசரி அழைத்துக்கொண்டு அவர்கள் செலவில் டீக்குடிக்க, சினிமாப் பார்க்க சிலுவைக்கு எந்தத் தயக்கமுமில்லை! இப்படி தனக்கு 'வேலை, வீடு, ஸ்கூட்டர், நவீன வசதிகள் வேணும்' என்று கனவு காண்கிற சிலுவை தனது சாதி மக்களிடமிருந்து அந்நியமாகிறான். விலகி விலகிச் சென்று தனிமையில் இனிமை காண்கிறான். கடைசியில் நாவலின் கடைசி மூன்று பக்கங்களில் திடுதிப்பென்று மதம் மாறுகிறான். அந்த மாற்றத்தை உறுதிப்படுத்தி வாங்கிய பேப்பர்கள்தாம் (அரசு ஆவணங்கள்) அவனை எங்கெங்கோ கொண்டு போயின என்று முடிகிறது நாவல். 'தொடரலாம்...' என்கிற கடைசி வார்த்தையைப் படித்ததும் 'ஐயோ, இன்னுமா?' என்று ஓர் உணர்வு ஏற்படுகிற அளவிற்கு நாவலின் நீளம் பொறுமையைச் சோதிக்கிறது.

கம்யூனிஸ்டுகள் பற்றிய சித்தரிப்பு மோசமானதாக இருக்கிறது. சமீப காலப் போக்கு இது. கேலியான-தொனியில்தான் எழுதுகிறார். போனால் போகட்டுமென்று எஸ்.கே.பி. என்ற தோழரைப்பற்றி மட்டும் பெருமிதமான குறிப்பு வருகிறது. கட்சி, சாதீய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எதுவுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு மீண்டும் மீண்டும் வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சி தலித்துகளின் உரிமைகளுக்காகவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும் போராடிய நிகழ்வுகள் ஏராளம். திட்டமிட்டு அவற்றை 'ஒன்றுமில்லை' என்று புறந்தள்ள முற்படுவது ஒரு படைப்பாளியின் தார்மீக நேர்மையைக் கேள்விக்கு உள்ளாக்கவே செய்யும்.

தலித் மக்கள் நடுவே பிறந்து வளர்ந்து படித்துப்பட்டம் பெறுவார்கள்; மதமாற்ற சர்ட்டிபிகேட் வாங்கி நல்ல வேலைகளில் அமர்வார்கள்; மெல்ல தலித் சமூக மக்களிடமிருந்தே முற்றிலும் விலகி அந்நியமாவார்கள்; நடை உடை பாவனைகளில், பழக்க வழக்கங்களில் மேல் நிலையாக்கத்திற்கு ஆளாவார்கள். தமது சாதி மக்களின் நடுவே எந்தத் தொடர்புமின்றி நகரத்து அறிவுஜீவிகளான பின்பு - தலித் முன்னேற்றம் பற்றி சகட்டு மேனிக்கு 'இலக்கியம் பண்ணுவார்கள்'. ஆனால் அன்றும் இன்றும் அந்த மக்களின் நடுவே பணி செய்து கொண்டு எந்தவித அங்கீகாரமும் இல்லாமல் வாழ்ந்து மடிந்து கொண்டிருக்கிற ஆயிரமாயிரம் கம்யூனிஸ்ட்டுகள் பற்றி மனச்சாட்சியே இல்லாமல் அவதூறு செய்வார்கள். இது இன்று ஃபாஷனாகிவிட்டது. ராஜ்கௌதமன் மட்டும் (சிலுவைராஜ் அல்ல! அதுதான் மதம் மாறி பெயரும் மாறியாச்சே!) விதிவிலக்காயிருக்க முடியுமா?

| | |
|---|---|
| நாவல் | : சிலுவைராஜ்சரித்திரம் |
| ஆசிரியர் | : ராஜ்கௌதமன் |
| வெளியீடு | : தமிழினி,<br>342, டி.டி.கே.சாலை, சென்னை - 14. |

# கட்டுப்பாடு

திரியில் எரிந்தால்
தீபம்
திரிந்து எரிந்தால்
அது தீ

அமைதியாய் ஓடினால்
ஆறு
அடங்காமல் ஓடினால்
அது வெள்ளம்

ஒலி ஒழுங்கானால்
சங்கீதம்
ஒழுங்கற்ற போது
அது சப்தம்

நீ
தீயின் சக்தி கொண்ட
தீபமாய் இரு
வெள்ளத்தின்
வீரியம் கொண்ட
ஆறாய் இரு
சப்தத்தை அடக்கிய
சங்கீதமாய் இரு.

— ம.அருள்ராஜ்



படிப்பகம்

www.padippakam.com

நேர்காணல்

# மக்களை அணி திரட்டுவதே முதற் பணி . . .

■ அ. மார்க்ஸ்



***இந்துத்துவ சக்திகள் இன்று வளர்ந்துவருவதாக தோற்றமளிக்கிறது. இதற்கான அரசியல், சமூகக் காரணங்கள் என்னவாக இருக்கும்?***

● இந்துத்துவ சக்திகள் 75 ஆண்டுகளாக தொலைநோக்குடன் சிந்தித்து செயல்பட்ட ஒரு அமைப்பு. காந்தியை சுட்டுக்கொன்ற பிறகு தடை செய்யப்பட்டு அவர்களுக்கு பின்னடைவு ஏற்பட்ட காலத்தில்கூட அதனைப் பயன்படுத்திக்கொண்டு வளர்ந்தார்கள். அமைப்பை எல்லா இடங்களிலும் வலுப்படுத்துவதற்கு முயற்சி செய்தார்கள். 1930 களிலேயே முசோலினியை சந்தித்து அவன்கார்டிஸ்டி போன்ற அமைப்பாக ஆர்.எஸ்.எஸ். ஐ உருவாக்கி அதே மாதிரியில் பள்ளிக்கூடங்களையும் துவக்கினார்கள். இப்பொழுது இந்தியா முழுவதும் அப்படிப்பட்ட 1 லட்சம் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றில் இந்துத்துவக் கல்வி அளிக்கப்படுகிறது. இங்கே உருவான மாணவர்கள் பல உயர் பதவிகளில் இருந்துகொண்டு இந்துத்வ கருத்துக்களை பரப்புகிறார்கள். இதெல்லாம் அவர்களுக்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. உலக அளவில் மார்க்சியத்திற்கு ஏற்பட்ட பின்னடைவால் பாசிச சக்திகள் தலையெடுத்துள்ளன. இந்தியாவிலும் பாசிசம் புத்துயிர்பெற்றுள்ளது. அடுத்து காட்சி ஊடகத்தை இந்துத்துவ சக்திகள் பயன்படுத்தி மக்களைத் திரட்டுகின்றன. ராமன் என்கிற பிம்பம் அவர்களுக்கு பெரிதும் பயன்பட்டது. கல் பூஜை, விநாயகர் சிலை ஊர்வலம் போன்றவற்றையும் மக்களைத் திரட்ட அவர்களுக்குப் பயன்படுகிறது. மதமோதலை உருவாக்கி வன்முறையையும் கொலையையும் வைத்துக்கூட அவர்கள் மக்களைத் திரட்டுகிறார்கள்.

***இதனை எவ்வாறு எதிர்கொள்வது?***

● இந்துத்வ சக்திகளுக்குப் பின்னால் மக்கள் அணிதிரளாத வகையில் கருத்துப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். அடையாளப்பூர்வமான நிகழ்வுகள் (கூட்டம் போடுவது, ஆர்ப்பாட்டம் நடத்துவது போன்றவை) மட்டும் போதாது. வலதுசாரிகள் மக்களை திரட்டும் அளவுக்கு இடதுசாரிகள் மற்றும் மதசார்பற்ற கட்சிகள், அமைப்புகள் மக்களை திரட்டவில்லை என்பதை ஒரு கட்டுரையாளர் சமீபத்தில் வேடிக்கையாக சொல்லியிருக்கிறார். அதாவது இன்றைக்கு மக்களை மொபலைஸ் செய்வது மொபைல் கம்பெனிகள்தான் என்று அவர் சொல்கிறார்.

***வலதுசாரிகளுக்கு கோயில், திருவிழா போன்ற விஷயங்கள் மக்களைத் திரட்டுவதற்கு எளிதான வாய்ப்புகளாக அமைந்துவிடுகின்றன. ஆனால் இடதுசாரிகளும் மதச்சார்பற்ற கட்சிகளும் அமைப்புகளும் இப்படி மலினமான முறையில் மக்களைத் திரட்ட இயலாது. இந்த நிலையில் மாற்று வழியாக எதைக்கூறுகிறீர்கள்?***

● சென்னையில் 10-15 ஆண்டுகளுக்கு முன்பு இல்லாத விநாயகர் ஊர்வலத்தை ஆர்எஸ்எஸ்-காரர்கள் இப்போது நடத்துகிறார்கள். இதற்கு அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், மீனவர்கள் என்ற அடித்தள மக்களையே அணிதிரட்டுகிறார்கள். இதுபோன்ற சமயங்களில் அடித்தள மக்கள் மத்தியில் இந்து மதவெறிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து மாற்று இயக்கங்களைக் கட்ட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் கொடுமைகளுக்கு ஆளாகியிருந்தபோது பி.சீனிவாசராவும் மற்றவர்களும் நேராக களத்தில் இறங்கி எப்படித் தியாகம் செய்தார்களோ அந்த மாதிரியான தியாகத்தைச் செய்ய நாம் தயாராவது அவசியம். அப்படிப்பட்ட நேரடி நடவடிக்கைகள் மூலம்தான் இந்துத்வா சக்திகளை எதிர்கொள்ள முடியும். இத்துடன் உலகமயத்தால் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சனைகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும். தொழிலாளர்கள், தொழிலாளர் வர்க்கம் போன்றவற்றில் இப்போது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்த நிலைமை மாறி பலர் செய்கின்ற வேலையை வீட்டுக்குள்ளிருந்து ஒருவரே செய்து முடித்துவிடுகிற கணினி யுகம் இப்போது வந்துள்ளது. இதற்கேற்ப நாமும் போராட்ட உத்திகளில் புதிய வடிவங்கள் பற்றி சிந்தித்தாக வேண்டும்.

***திருவிழாக்கள் மக்கள் ஒற்றுமையின் அடையாளமாக இருக்கின்றன என்று கூறப்படுவது பற்றி...***

● எல்லாத் திருவிழாக்களும் மக்கள் ஒற்றுமையை வலியுறுத்துவதாக கூற முடியாது. பொங்கல் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

திருவிழாவை அப்படிச் சொல்லலாம். ஆனால் பெரும்பாலான கோயில் திருவிழாக்கள் சாதிய படிநிலைகளை உறுதி செய்வதாகத்தான் இருக்கின்றன. திருவிழா காலத்தில்கூட மக்களின் கடமைகள் சாதிய ரீதியாகத்தான் பிரிக்கப்படுகின்றன. தப்படிக்க ஒருவர். கோயில்களை கூட்டிப்பெருக்க ஒருவர். முதல் மரியாதை பெற்றுக்கொள்ள ஒருவர் என்றெல்லாம் வேலைகள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் சாதியத்தை உறுதிப்படுத்துகிற விஷயமாகவும் திருவிழாக்கள் இருக்கின்றன. இன்னமும் சில கோயில்களில் தேர் இழுத்தல் போன்ற மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளில் தேர் வடத்தைப் பிடிப்பதற்குக்கூட தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது.

***இந்திய சிந்தனை மரபு, இந்து சிந்தனை மரபு என்று சொல்லப்படுகிறதே?***

- அது முற்றிலும் தவறான கருத்து. அது மட்டுமல்ல, பிஜேபி சொல்கிற கருத்தும் அதுதான். பௌத்த மதம், சமண மதம் ஆகியவற்றையும் இந்துமத சிந்தனைக்கு உட்பட்டதாக அவர்கள் கொண்டு வருகிறார்கள். இந்து மதம் என்ற சொல் மிக சமீப காலத்தில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். மிகவும் முற்பட்ட காலத்தில் பிராமண மதம், சிரமண மதம் என்ற சொற்கள்தான் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் பிராமண மதம் என்பது வேத உபநிடதங்களை, வேள்விகளை, வர்ணாசிரமத்தை மையப்படுத்தியது. சிரமண மதம் என்று அறியப்படுபவை சமணம், பௌத்தம், ஆசீவகம். இந்த மதங்கள் வேதம், வேள்வி, வர்ணாசிரமம் ஆகிய கொள்கையினை எதிர்ப்பவை. வருணங்கள் பற்றி பேசும் பிராமண மதம் ஒவ்வொரு வர்ணத்திற்கும் சாராம்சமான ஒரு பண்பு உண்டு. குணம் உண்டு. இதற்கேற்ப கடமை (சுயதர்மம்) யும் உண்டு என்று சொல்கிறது. ஆனால் பௌத்த மதம் இந்த சாராம்ச தத்துவத்தை எதிர்க்கிறது. குப்தர் காலத்தில்தான் இந்து மதத்திற்கான மையக் கரு உருவானது. இவர்கள் காலத்தில் தோன்றிய அர்த்தசாஸ்திரம் அதற்குப் பின் வந்த மனு தர்மம் இவை தவிர நூற்றுக்கணக்கான தர்ம சாஸ்திரங்கள் என்பவை எல்லாம் குற்றவியல் நடைமுறை சட்டங்கள்போல அரச நீதியாக தண்டனை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன. சாராம்ச தத்துவத்தை மறுத்த லோகாயதவாதம் பேசிய புத்த, சமண மதங்களையும் உள்ளடக்கிய இந்திய சிந்தனை மரபை இந்து சிந்தனை மரபு என்று கூற முடியாது.

***இந்துத்துவத்தை எதிர்ப்பவர்கள் இந்துக்களை எதிர்ப்பவர்களாக பேசப்படுகிறதே இது பற்றி உங்கள் கருத்து?***

- இந்துத்வத்தை எதிர்ப்பவர்கள் எல்லாம் இந்துமதத்தை எதிர்ப்பவர்கள் அல்ல. இந்துத்வத்திற்கு எதிரிகள் என்று பட்டியல் தயாரித்தவர்கள் மூன்று எதிரிகளைக் காட்டினார்கள். திரிசூலத்திற்கு அடையாளமாக அவர்கள் கிறித்தவர்கள், முஸ்லிம்கள், கம்யூனிஸ்ட்டுகள் என்று பட்டியலிட்டார்கள். நபர் என்று பார்த்தால் காந்திதான் அவர்களின் முதல் எதிரியாக இருந்தார். காந்தி, வர்ணாசிரமத்தையும் கூட ஏற்றுக்கொண்ட ஒரு இந்து. மரணத்தின்போது கூட 'ஹே ராம்' சொல்லிக்கொண்டுதான் இறந்தார். அப்படி இருந்தும் அவரை இந்து மதவெறியன் கொல்லக்காரணம் அவர் இந்து ராஷ்டிரத்தை மறுத்தார் என்பதுதான். 1943-க்குப் பிறகு காந்தி மதசார்பற்ற கருத்தை வலியுறுத்தினார். இந்தக் கருத்தை இந்தியாவில் முதன் முதலில் மக்கள் மத்தியில் பரவலாக்கியவரும் அவர்தான். ஒரு மதசார்பற்ற அரசு என்கிற கருத்தாக்கத்தை அரசியல் ரீதியாக காந்திதான்கொண்டுவந்தார். அவர் சந்திக்கிற உரையாடல்கள், மேடைப்பேச்சுக்கள், அரசியல் நிர்ணய சபை நடந்துகொண்டிருக்கும்போது வெளியில் சொன்ன கருத்துக்கள் அத்தனையும் மதசார்பற்ற அரசு என்பது குறித்துதான். எனவே இந்துத்வாவை எதிர்ப்பவர்கள் எல்லாம் இந்துக்களை எதிர்ப்பவர்கள் ஆக மாட்டார்கள்.

***இந்துத்வம் பற்றி பல வகையில் ஆய்வு செய்துள்ள நீங்கள் தற்போது வெளிவந்திருக்கும் ந.ரவீந்திரனின் இந்துத்துவம் இந்து சமயம் சமூக மாற்றம் நூல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

- இந்த நூல் இந்து மதத்தை பெருமையாக பேசுகிற ஒரு நூலாகத்தான் தெரிகிறது. புத்த மதத்திற்கு எதிரானவராக இருந்த அர்த்தசாஸ்திரம் எழுதிய கவுடில்யரை மகாசிந்தனையாளர் என்று புகழ்கிறார். பக்தி இயக்கத்தை பேரியக்கம் என்று சொல்கிறார். இந்து மதம் சமூக மாற்றத்திற்கான கலாச்சார சக்தி என்று கூறுகிறார். வர்க்கமற்ற கிருத யுகத்தை படைக்கும் சாத்தியம் உள்ள மதம் இந்து மதம் என்றும் மாற்றங்களுக்கு உந்து சக்தியாக இருந்து வரலாறு படைத்த மதம் இந்து மதம் என்றும் அவர் கூறுகிறார். இப்படிப்பட்ட கருத்துக்கள் தற்போதைய சூழ்நிலையில் இந்துமதத்தை புகழ்ந்து பேசி இந்துத்வாவை வளர்க்க நினைப்பவர்களுக்கு சாதகமாக அமையும் வாய்ப்பு அதிகம் இருப்பதாகவே கருதுகிறேன். மார்க்சிய அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் இந்த நூலில் பல மவுனங்கள் உள்ளன. இந்து மதம் கல்வி மறுத்தலை உபதேசம் செய்த சூழ்நிலையில் பௌத்த, சமண மதங்களின் கல்வித்தொண்டு, மருத்துவத் தொண்டு ஆகியவை பற்றி இந்த நூல் எதுவும் பேசவில்லை. சமண பௌத்த மதங்கள் அழிக்கப்பட்டது ஒரு இயக்க அம்சமாக சுட்டப்படுகிறது. 8 ஆயிரம் சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டது பற்றியோ காஞ்சிபுரம் கோயில், திருவாரூர் குளம் ஆகியவை சமண மதத்தை அழித்து கட்டப்பட்ட விஷயமோ புத்தத் துறவி ஒருவரின் தலையைக் கொண்டு வந்தால் 100 பொற்காசுகள் இனாம் என்று புஷ்யமித்திரர் வெளியிட்ட அறிவிப்பு பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லை. கோயில் பொதுவானதாக இருந்தாலும் கருவறைக்குள் பார்ப்பனர்கள் மட்டுமே செல்ல முடியும் என்ற விஷயத்திலும் இந்த நூல் மவுனம் சாதிக்கிறது. இந்து மதக்கோயில்களில் தாசிகளாக்கப்பட்ட லட்சக்கணக்கான பெண்கள் பற்றிய குறிப்பும் இல்லை. தேவதாசிப் பெண்களுக்கு ஆடு மாடுகளுக்கு சூடு போடுவதுபோல் சூடுபோட்டு வதைப்படுத்தியிருக்கிற கொடூரங்கள் பற்றி காளகஸ்தி கல்வெட்டு கூறுகிறது. அதுபோன்ற விஷயங்களும் இந்த நூலில் இடம்பெறவில்லை. தமிழகத்தில் இருந்த பாரம்பரியமான கடவுளர்களும் ஆரிய வருகையால் அறிமுகமான நாராயணன், கிருஷ்ணன் போன்ற கடவுள்களும் கலந்து புதிய வடிவங்கள் பெற்றதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் காத்தவராயனுக்கு அங்கீகாரம் கொடுத்து எந்தக் கோயிலிலாவது மூலஸ்தானத்தில் வைப்பார்களா என்ற வினாவுக்கு இதில் விடையில்லை. கிறித்தவ, முஸ்லிம் சமயங்கள் மக்களை வேறுபாடுகள் இல்லாமல் ஒரு சமூகமாக மாற்றியவை. ஆனால் இந்து மதம் மக்களிடையே இருக்கும் வேறுபாடுகளை அப்படியே பராமரித்துக்கொண்டு ஒரு சமயமாக உருவாக்கியது. இதைத்தான் அம்பேத்கர் விமர்சனம் செய்கிறார். இந்து சமயம் என்பது சமூகம் இல்லாத சமயம் மட்டுமல்ல. சமூகத்திற்கு எதிரான சமயமும் ஆகும் என்று அவர் கூறுகிறார். இப்படி இந்த நூலில் பல மவுனங்களும் விடை கிடைக்காத வினாக்களும் உள்ளன.

- சந்திப்பு

மயிலை பாலு, தா. மணிமேகலை



படிப்பகம்

www.padippakam.com



# சென்னை அரசு ஓவியக்கல்லூரி



■ இரா. குமரகுருபரன்

எழும்பூர் ரயில் நிலையம்/சென்ட்ரல் ரயில் நிலையம்.

ஜனத்திரள் நடுவே சிறுவயது கதாநாயகன்/கதாநாயகி, சென்னை மாநகரத்தை வந்தடைவதைக் குறிக்கும் சின்னங்கள்-முன்னாள் தமிழ்த் திரைப்படங்களில்.

இது ஒரு காலம்.

உழைப்பாளர் சிலை/காந்தி சிலை...

-முற்போக்கான திரை இயக்குநர்கள் காட்டிய 'சென்னை'.

தொழில்நுட்ப வளர்ச்சியில் இணையதள முகவரியைக் கண்டு மூக்கில் விரல் வைக்கிறோம். சென்னை மாநகரத்தின் அடையாளமான இந்த இரு சிலைகளையும் வடித்து சென்னைக்கே சுருக்கமான முகவரியைக் கொடுத்தவர் சிற்பி "ராய் சவுதரி" தான் என்றால் மிகையாகாது!

ஒன்றுபட்ட இந்தியாவில் (தற்போதைய வங்கதேசம்) தேஜாம் என்ற ஊரில் பிறந்து கொல்கத்தாவில் அபனீந்திரநாத் தாகூரின் ஓவிய நிறுவனத்தில் பயின்று, இத்தாலிய ஓவியர் போலெஸிடம் மேற்கத்திய ஓவிய மரபுகளைக் கற்று பல விருதுகள் பெற்ற ராய் சவுதரிக்கு சென்னை ஓவியக்கல்லூரியின் முதல்-முதல்வராகப் பொறுப்பேற்க அழைப்பு கிடைத்தது. 1929-ஆம் ஆண்டில் இப்பொறுப்பை ஏற்று 1957 வரை இதில் தொடர்ந்த பெருமை இவருக்கு உண்டு.

லலித் கலா அகாதெமி மத்திய அரசால் உருவாக்கப்பட்டபோது அதன் முதல் தலைவராகவும் 1954-ல் நியமிக்கப்பட்டவர் ராய்சவுதரி.

1.5.1850-ல் சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சென்னை ஓவியப்பள்ளி (Madras School of Art) என்ற தனியார் நிறுவனத்தைத் துவக்கியவர் டாக்டர் அலெக்ஸான்டர் ஹன்டர் என்ற பிரிட்டிஷ்காரர். புகைப்படம், உலோகக்கலைப்படைப்பு ஆகிய இருதுறைகளும் இந்நிறுவனத்தின் சிறப்பு. 1860 களில் கட்டிடக்கலை வல்லுநராக ராபர்ட் பெல்லோஸ் சிஷோம் இதன் முதல்வராகப் பொறுப்பேற்றார். சென்னை மாநகரத்தின் பாரம்பரியக் கட்டிடங்களில் ஒன்றான இப்பள்ளியின் வண்ணக் கலவைக் கண்ணாடி (Stained glass) பதிக்கப்பட்ட வளைவு பைஜான்டின் பாணி பழமையை நினைவுறுத்தும். சிற்பம், துணியச்சுக்கூடமாக இந்த இடம் விளங்கியது. பிற்பாடு மெட்ராஸ் ஓவியக் கைவினைக் கல்லூரி (Madras College of Art & Craft) யாகவும், தற்சமயம் அரசு கவின்கலைக் கல்லூரியாகவும் (Government College of Fine Arts) பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழக அரசின் கலை-பண்பாட்டுத்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

“இது ராய்சவுதரி வடித்தது...” “இது தனபால் மாஸ்டர்... இது சந்தானராஜ்வடித்த பெரியார்...” “இது மூக்கையாவின் சுடுமண் சிற்பம்...” “இது தட்சிணாமூர்த்தி செதுக்கியது...”

-என்ற உற்சாகக் குரல்களுடன் படைப்புகளை அடையாளம் கண்டு புதிய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் முன்னாள் ஓவிய, சிற்ப மாணவர்களின் கண்கள் பனிக்கின்றன.

கல்லூரி வளாகங்களில் நின்றுகொண்டும், அமர்ந்துகொண்டும், சாய்ந்தும், சிந்தித்தும் உறைந்துள்ள சிற்பங்களைத்தடவிப்பார்த்து நெகிழ்வோடு நினைவுகூரும் பிரபல ஓவியர்கள் தங்கள் கடந்தகாலத்தை மீண்டும் வாழ்கிறார்கள்...

“இங்குள்ள மரத்தடியின் கீழ்தான் தனபால் மாஸ்டர் 'போர்ட்ரெய்ட் ஸ்கெட்சஸ்' வரைந்து காண்பிப்பார்... அந்த மரத்தடியில் சந்தானராஜின் தூரிகை அசைவைக் கண்கொட்டாமல் நாங்கள் பார்த்துக்கொண்டிருப்போம்” - ட்ராட்ஸ்கி மருது உணர்ச்சிவசப்பட்டு மேலே பேச முடியாமல் தவிக்கிறார்.

ஓவியம், சிற்பம், துகிலியல் வடிவமைப்பு (Textile Design), காட்சித் தொடர்பு (Visual Communication), அச்சுப்பதிப்பு (Print-Making) புகைப்படம் ஆகிய பிரிவுகளில்



படிப்பகம்

www.padippakam.com

நான்காண்டு பட்டப்படிப்பும் (BFA) இரண்டாண்டு பட்டமேற்படிப்பும் (MFA) கற்றுத்தரப்படுகிறது.

கல்லூரி நுழைவுத் தேர்வில் உயிர்மாதிரி (Still-Life), நவீனப்பாணி (Modern Art) இயற்கைக்காட்சி (Landscape) என்ற அம்சங்களில் மாணவர்களின் ஆற்றல் தெரிவுசெய்யப்படுகின்றது. முதலாண்டிலுள்ள 120 இடங்களில் 20 வெளிமாநில மாணவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

560 மாணவர்களில் 160 பெண்கள் இருப்பது சிறப்பம்சம்.

மேற்கத்திய ஓவிய இஸங்களைப் புரிந்துகொண்டு தமிழகப் பாரம்பரியத்தில் காலூன்றி நிற்பதால் கோட்டோவிய மரபின் நீட்சியாக வண்ணத்தைக் கொண்டு செல்வதில் தேர்ச்சிபெற்றுள்ளனர் தாகமுள்ள மாணவர்கள். அகில இந்திய அளவில் வங்க மரபைப்போல தென்னிந்திய மரபுவழி ஓவியங்களைத் தக்கவைத்து மேலும் வளர்த்தெடுப்பதில் இவர்களுக்கு மூத்த தலைமுறை ஓவியர்கள் வழிகாட்ட வேண்டும்.

இத்தாலிய ஓவியர் பீட்டர் பால் ரூபென்ஸ் (1577-1640) "உலகில் எல்லாமும் எனது தேசமே. எங்கு சென்றாலும் எனக்கு வரவேற்பு இருக்கும் என்றே நம்புகின்றேன்" என்று குறிப்பிட்டது இங்கு நினைவுக்கு வருகிறது.

மே தினத்தில் துவக்கப்பட்ட இந்நிறுவனத்துக்கு ரூபென்ஸின் வாசகம் பொருந்தும்தான்!

**பிரபலமான முன்னாள் மாணவர்கள் (ஓவியர்/சிற்பி) அடைப்புக்குறிக்குள் படிப்பு முடித்த ஆண்டு**

பி.எல்.நரசிம்மமூர்த்தி (1939), கே.சி.எஸ்.பணிக்கர்/எஸ்.தனபால்/கே.ஸ்ரீநிவாசுலு (1940), எச்.வி.ராம்கோபால் (1943), கிருஷ்ணாராவ்/சுல்தான் அலி (1945), எம்.எஸ்.தேவசகாயம் (1946), எஸ்.கன்னியப்பன் (1950), கே.எம்.கோபால் (1951), எல்.முனுசாமி/பி.வி.ஜானகிராம் (1953), பி.பி.சுரேந்திரநாத்/அந்தோணிதாஸ் (1954), எம்.கே.முத்துசாமி/ஏ.பி.சந்தானராஜ்/டி.ஆர்.பி.மூக்கையா (1956), பி.பெருமாள் (1957), எஸ்.முருகேசன் (1958), ஆர்.வரதராஜன் (1959), எம்.ரெட்டப்ப நாயுடு (1960), வித்யாசங்கர் ஸ்தபதி (1961), ர.அல்போன்ஸோ/எஸ்.கே.ராசவேலு (1962), எம்.சேனாதிபதி/எம்.சூரியமூர்த்தி (1963), கே.வி.ஹரிதாஸன்/கே.எம்.ஆதிமூலம்/ஆர்.பி.பாஸ்கரன்/சி.தட்சிணாமூர்த்தி (1966), டி.வேங்கடபதி (1967), பி.எஸ்.நந்தன்/எஸ்.ஜி.வாசுதேவ் (1968), எஸ்.நந்தகோபால் (1971), வீர.சந்தானம் (1972), ட்ராட்ஸ்கி மருது (1977), விஸ்வம் (1978)

# கவின் கலைக்கல்லூரி கவினுறுமா?

■ அ. குமரேசன்

கல்லூரி வளாகம் என்றாலே கற்பனைகளும் கலைகளும் ஊற்றெடுக்கும் பூங்காதான். பொருளாதாரம், பொறியியல், மருத்துவம், தொழில் நுட்பம், நிர்வாகம் என்று கற்றுத் தரப்படுகிற பாடம் எதுவானாலும் ஒவ்வொரு கல்லூரியிலும் கலைப்படைப்பாளிகள் இருப்பார்கள். வளரும் கலைஞர்களுக்கென்றே, அவர்களது கற்பனை வளர்ச்சிக்கென்றே தமிழகத் தலைநகரில் இயங்கி வருவதுதான் அரசு கவின் கலைக் கல்லூரி. சென்னையின் புகழ்பேசும் இடங்களுள் ஒன்றாக, பல புகழ்பெற்ற கலைஞர்களை உருவாக்கிய புகழுக்குரியதாகத் திகழும் இக்கல்லூரி இருக்குமிடமோ சென்னைவாசிகளுக்கே கூட பளிச்செனத் தெரியாது! அத்தனை அடக்க ஒடுக்கமாக, ஆரவார அடையாளம் ஏதுமின்றிச் செயல்படும் இக்கல்லூரியிலிருந்து புறப்பட்டு தங்களுக்கென அடையாளம் பதித்தவர்கள் நிறையப்பேர்.

அப்படிப்பட்ட பெருமையுடைய கல்லூரியிலும் பிரச்சனைகள்!



டி.பி. ராய் சௌதரி



படிப்பகம்

www.padippakam.com

“முதலில் ஒரு அடிப்படையான பிரச்சனை. பெரும்பாலும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இங்கு பயில்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து வந்துள்ள மாணவர்களும் உண்டு. சென்னைவாசிகள் மிகக் குறைவுதான். ஆனால் எங்களுக்கு என தனியாக மாணவர் விடுதி எதுவும் கிடையாது,” என்று ஒரு மாணவர் சொன்னபோது வியப்பாக இருந்தது. நூற்றைம்பது ஆண்டுகளாக ஒரு கல்லூரி-முழுக்க முழுக்க அரசுக் கல்லூரி-ஆனால் மாணவர் விடுதி இல்லை என்ற செய்தி சங்கடமாகவும் இருந்தது.

விடுதி என்பது மாணவர்கள் தங்குவதற்கும் சாப்பிடுவதற்குமான இடம் மட்டுமல்ல. கல்லூரி நேரம் முடிந்தபின் மாணவர்களிடையேயான கலந்துரையாடல்களும் கருத்துப் பரிமாற்றங்களும் அவர்களது வளர்ச்சிக்கு முக்கியமானவை. சொல்லப்போனால் சமூக உறவு என்பது அடிப்படையானது. இதற்கெல்லாம் விடுதி வசதி மிக ஆதாரமானது. அதுவே இவர்களுக்கு மறுக்கப்பட்டுவிட்டதாகியிருக்கிறது.

அடுத்த முக்கிய குறை-காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்பதுதான். குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறைக்கு ஆசிரியரே நியமிக்கப்படவில்லை.

இப்படி ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் விடுவதால் அரசுக்கு என்ன மிச்சமாகிவிடப்போகிறது? இது சில ஆசிரியர்களின் வேலைவாய்ப்புப் பிரச்சனை அல்ல-மாணவர்களின் எதிர்காலம் சம்பந்தப்பட்ட பிரச்சனை.

நிலைமையைப் புரிந்துகொண்டு ஆசிரியர்கள் ஒத்துழைக்கிறார்கள். மூத்த மாணவர்களும் தாங்கள் கற்றறிந்ததை இளவல்களுக்குக் கற்றுத்தர முன்வருகிறார்கள். இந்த ஆசிரியர்-மாணவர் நல்லிணக்கம்தான் கல்லூரியின் கவுரவத்தைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது

கல்லூரியின் தனிச்சிறப்பு வாய்ந்த துறைகளில் ஒன்று 'செராமிக்' எனப்படும் பீங்கான் கலைப்பயிற்சிப் பிரிவாகும். உலக அளவில் சந்தையைப் பிடிக்கக்கூடிய துறை இது. ஆனால், இப்பிரிவு மாணர்வகளோ வெள்ளைக் களிமண்ணில் உருவங்களைச் செய்கிறவர்களாக வளர்கிறார்களேயன்றி, முழுமையான செராமிக் கலைஞர்களாகப் பரிணமிப்பதற்குப் பெரும் முட்டுக்கட்டை ஒன்று இருக்கிறது. வெள்ளைக் களிமண்ணில் வார்க்கப்படும் அழகிய வடிவங்களை சுடப்பட்ட செராமிக் தயாரிப்புகளாக மாற்றுவதற்கான உலை பல ஆண்டுகளாகப் பழுதுபட்டுக் கிடக்கிறது.

மாணவர்கள் தயாரித்திருந்த அற்புதமான சில வடிவங்கள் மட்டும் உலையில் சுடப்பட்டு அதற்குரிய பளபளப்புடன் காட்சியளித்தன. “எதற்காக வந்தோமோ அதை முழுசாகக் கற்றுக்கொண்டுவிட வேண்டும் என்ற உந்துதலுடன் நாங்கள் எங்கள் சொந்தச் செலவில் வெளியே தனியார் உலைகளில் கொடுத்துச் செய்திருக்கிறோம்,” என்று முது நுண்கலை (செராமிக்) மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

“நாங்கள் கல்லூரி மாணவர்கள். ஆனால் அதற்கான அடையாள அட்டை எதுவும் எங்களுக்குக் கிடையாது. வெளியில் ஏதேனும் பிரச்சனை என்றால் நாங்கள் இந்தக் கல்லூரியின் மாணவர்கள் என்பதை நிரூபித்துத் தப்பித்து வருவதே பெரும்பாடாக இருக்கிறது,” என்றார் ஒரு இளங்கலை இரண்டாமாண்டு மாணவர்.

“எங்களுக்குப் பட்டமளிப்பு விழாக்கள் கூட நடத்தப்படுவதில்லை. படித்து முடித்ததும் அலுவலகத்துக்குச் சென்று வழக்கமான ரசீது வாங்குவது போல பட்டத்தையும் வாங்கிக்கொள்ள வேண்டிய நிலைமை,” என்றார் மற்றொரு மூத்த மாணவர்.

“அடிப்படையாகவே இந்த மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற அக்கறை அரசாங்கத்துக்கு இல்லை. ஏனெனில், இந்தக் கலையை வளர்க்க வேண்டும். அதன் மூலம் தேசிய அளவிலும் உலக அளவிலும் புகழ்பெற உதவ வேண்டும் என்ற சிந்தனை இல்லை,” என்கிறார் தூரிகைப் போராளியும் இக்கல்லூரியின் முன்னாள் மாணவருமான வீர சந்தானம்.

தாம் இங்கு படித்த பசுமையான நினைவுகளுக்குள் மூழ்கிய அவர், “முன்பு இங்கு முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற வேறுபாடு கிடையாது. எல்லோரும் நண்பர்களாக, தோழமைக் குடும்பமாகப் பழகினோம். வறிய குடும்பத்திலிருந்து வரும் மாணவர்கள் இந்த நல்லுறவு காரணமாக கலை, வரலாறு, உலக

- ராய் சவுதரி, கே.சி.எஸ்.பணிக்கர், கிருஷ்ணாராவ், தனபால், முனுசாமி, சுரேந்திரநாத், சந்தானராஜ், முருகேசன், அல்போன்ஸோ, பாஸ்கரன், கோபால் ஆகியோர் இக்கல்லூரியின் முதல்வர்களாகப் பொறுப்பு வகித்தவர்கள்.
- ஸாபு சிரில், தோட்டா தரணி, கிருஷ்ணமூர்த்தி, ட்ராட்ஸ்கி மருது ஆகியோர் கலை-இயக்குநர்களாக திரைப்படத்துறையில் முத்திரை பதித்தவர்கள்.
- நடிகர் சிவகுமார் இக்கல்லூரியில் பயின்றவர்.
- எஸ்.ஜி.வாசுதேவ் 'சம்ஸ்காரா' 'விருட்ஷா' என்ற தேசிய விருதுபெற்ற கன்னடப்படங்களுக்கு கலை இயக்குநராகப் பணியாற்றியுள்ளார்.
- உழைப்பாளர் சிலையில் ராய்சவுதரிக்கு மாடலாக நின்ற ஓர் மாணவர் பத்திரிகை ஓவியர் ராமு.
- “BETWEEN THE LINES” (கோடுகளுக்கு ஊடாக...) என்ற தமது கோட்டோவியத் தொகுப்பை வெளியிட்டு வரலாறாகப் பதிவு செய்திருக்கிறார் ஓவியர் ஆதிமூலம்.
- ஆசிரியர் சந்ருவைச் சுற்றி கேள்விமேல் கேள்வியுடன் சூழ்ந்து நிற்கும் மாணவர் கூட்டம் உண்டு. ஆசிரியர்-மாணவர் உறவையும் மீறிய பாசப்பிணைப்பு இது. ராஜஸ்தானிய மரபு ஓவியத்தில் பயிற்சிபெற்றவர் 'சந்ரு' என்ற ஓவியர் சந்திரசேகரன்.



படிப்பகம்

www.padippakam.com

அளவிலான கலை வெளிப்பாடுகள், முக்கிய கலைஞர்களின் வரலாறு முதலியவற்றை மிக எளிமையாகக் கற்றுக்கொண்டனர். இப்போது அந்த நடைமுறை முற்றிலும் மாறிவிட்டது. மற்ற பல பொருளியல் கல்லூரிகள் போல முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்களிடையே ஒரு இடைவெளி உருவாகிவிட்டது. இதற்கு முக்கியக் காரணம் முன்பிருந்த பட்டய (டிப்ளமோ) முறை கைவிடப்பட்டு பட்டப்படிப்பு (டிகிரி) முறையாக மாற்றப்பட்டதுதான்," என்று ஒரு புதிய கண்ணோட்டத்தை முன்வைத்தார் அவர்.

"மற்ற துறைகளுக்கு இது பொருத்தமாக இருக்கலாம். ஆனால் இதுவோ படைப்பு... கலை... இதிலே பரீட்சை-மார்க் என்ற அமைப்பு உதவாது. இதனால் பரீட்சைக்குப் படிக்கிற மனநிலைதான் வளர்கிறதேயன்றி, படைப்பாக்கத்தில் வெற்றி பெறுகிற உந்துதல் உருவாவதில்லை," என்ற அவரது கருத்து விவாதத்துக்குரியது. முன்பு வெற்றிபெறுகிறவர்களுக்கு "கலை ஏந்தல்" என்ற பட்டங்கள் தரப்படும். இப்போது அதுவும் இல்லை. மாணவர்களின் படைப்புகளைப் படமெடுத்துப் புத்தகங்களாகத் தொகுக்க வேண்டும் என்ற முயற்சியே கிடையாது. பிறகு எப்படி ஆர்வம் வளரும்?"-என வீர சந்தானம் கேட்பதற்கு பதில் சொல்லப்போவது யார்?

"அரசுக் கட்டிடங்களில் ஓவியங்களை வாங்கி சுவர்களில் பொதுமக்கள் பார்வையில் படுவதுபோல் வைக்க வேண்டும் என்று முன்பு ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மக்களிடையே கலை ரசனை வளரவும், கலைஞர்களுக்கு நல்ல அறிமுகம் கிடைக்கவும் உதவக் கூடிய அரசாணை அது. ஆனால், அரசாங்கத்தாலேயே அமலாக்கப்படாத அரசாணையாக மறக்கப்பட்டுவிட்டது அது," என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்த நிலைமைகளையும் மீறி கலை பயிலவும் பயிற்றுவிக்கவும் மாணவர்கள், ஆசிரியர்கள் தொடர்ந்து முனைவது பாராட்டுக்குரியது. அந்த முனைப்பு, முனை மழுங்கிடாமல், தூரிகை பிசிறு தட்டிவிடாமல் பாதுகாப்பது அரசின் தலையாய கடமை. அந்தக் கடமையை அரசு உணர்ந்து செயல்படுமா?

கலையும் கலைஞர்களும் சமுதாயப் பண்பாட்டின் முதல் அடையாளங்கள். அதனைப் புரிந்துகொண்டு கவின்கலைக் கல்லூரி கவினுறப் பேணப்படுகிற நாள் வர வேண்டும் என்பதே கலைஞர்கள், ரசிகர்கள் இருவரும் சேர்ந்த கலையுலகின் எதிர்பார்ப்பு.

## நன்றி!

கூட்டாஞ்சோறு எழுத்தோவியம்

**ஓவியர் மருது**

உழைப்பாளர் சிலை கோட்டோவியம்

**ஓவியர் விஸ்வி**

## முகப்பரிச்சயம்

எங்கேயோ சந்தித்து
மறதியில் ஆழ்ந்த முகம்...
இல்லை, மிகவும் பழக்கப்பட்ட முகம்...
ஒரு நொடிப் பொழுதில் சந்தித்து
கவனியாமல் பின்வாங்கும் பார்வை...

ஐயம் தீராத பார்வை...
அணைக்க மறுக்கின்ற தோள்கள்...
மலராத புன்னகை...
பரிச்சயமான கண்கள், நாசி, நெற்றி...
உதடுகள், செவிகள்... ஆம்
மிகவும் பரிச்சயமான முகம்...
பழைய தோழனோ... பகைவனோ...
பள்ளித்தோழனோ... யார் இவன்?

தொழில் தேடும் படலங்களில்,
கடற்கரையில் கழித்த மாலைப்பொழுதுகளில்,
தனிமையான பயணங்களில்,
எங்கே... எப்போது...
அந்த முகம்
முகம் பார்க்கும் கண்ணாடியுள்ளோ?
உடைந்த சில்லுகளிலோ?
சூதாட்டக்களங்களிலா?
சிறைச்சாலையிலா?
கள்ளுக் கடையிலா?
பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலா?
அந்த விபச்சார விடுதியிலா?
எங்கே? எப்போது?
மறதியில் மறைந்தது?
நட்பைத் தந்து.

யார் இவன்?
இன்சூரன்ஸ் ஏஜெண்டா?
தபால்காரனா?
பத்திரிகையாளனா?
யார் இவன்?
கடந்த கால கனாக்களில் வந்த இரட்சகனோ?
கவிதையில் தோன்றிய
யுகத்தின் நாயகனோ?
போதி சத்துவரோ?

யாராக இருந்தால் என்ன?
போய்த் தொலையட்டும்...
நட்பும் பரிச்சயமும், கனவுகளும்
போய்த் தொலையட்டும்...
அவசரமாய் அலுவலகம் செல்ல வேண்டுமே...
அந்தப் பேருந்து
ஏன் இன்னும் வரவில்லை!

■ கவிஞர் ஆர். பாலராம்
தமிழில் : யு.கெ. குளக்குறைநத்து


படிப்பகம்

www.padippakam.com




SEEING IS BELEVING

1991 மார்ச் 3, பிற்பகல் 12.45 மணி. ஜார்ஜ்ஹால்லிடே, லேக் வியூ டெர்ரஸ்ஸில் உள்ள தனது அபார்ட்மெண்ட்டில் இருந்தார்.

வெளியே போலீஸ் சைரன் ஒலி தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருந்த சத்தம் கேட்டது.

இரண்டாவது தளத்திலுள்ள தனது படுக்கையறை ஜன்னல் மூலமாக வெளியே பார்த்தார்.

ஒரு காரின் முன் நின்று கொண்டிருந்த மனிதரை (ரோட்னி கிங் அவரது பெயர்) லாஸ் ஏஞ்செல்ஸ் போலீசார், அடித்து துவைத்துக் கொண்டிருந்தனர்.

உடனே ஜார்ஜ், வீட்டிலிருந்த தனது வீடியோ காமெராவை எடுத்துக்கொண்டு பால்கனிக்குச் சென்று படமெடுக்க ஆரம்பித்துவிட்டார்.

9 நிமிடங்கள் 22 நொடிகள் அதைப் படமாக்கினார்.

போலீஸ் அதிகாரிகள், ரோட்னி கிங்கை காலில் உதைத்து கீழே தள்ளினர்.

கிங் பலமுறை எழ முயற்சித்தும் முடியவில்லை.

கிங் முகத்தில் காயங்கள் ஏற்பட்டது. எலும்பு முறிவு ஏற்பட்டது. ஒரு கால் உடைக்கப்பட்டது. பின் கிங்கை மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்ட டது.

ஜார்ஜ்ஹால்லிடே கிங்கின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை உள்ளூர் போலீசுக்குத் தெரிவித்தார். சரியான பதில் இல்லை.

பின்னர் சி.என்.என். செய்தி நிறுவனத்திடம் தன்னுடைய வீடியோ பதிவை கொடுத்து ஒளிபரப்ப வேண்டினார். அங்கும் அவரை சட்டை செய்யவில்லை.

பின்னர், ஒரு முடிவிற்கு வந்து கே.டி.எல்.ஏ. என்ற உள்ளூர் தொலைக்காட்சி மூலமாக ஒளிபரப்ப கேட்டுக்கொண்டார். அவாகள் அதை ஏற்று 68 நொடிகள் ஒளிபரப்பினர். அது மக்களால் பரபரப்பாகப் பேசப்பட்டது.

அதன் முக்கியத்துவத்தை தாமதமாக உணர்ந்த சி.என்.என்-என்.பி.ஸி (C.N.N-N.B.C) செய்தி நிறுவனங்களும் ஜார்ஜின் வீடியோ பதிவை ஒளிபரப்பினார்கள்.

உலகமே அதைப் பார்த்தது.

பல மனித உரிமை அமைப்புகள் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்தன.

ரோட்னிகிங் கறுப்பாக இருந்ததும் போலீஸ் அதிகாரிகள் வெள்ளையாக இருந்ததும் தாக்குதல் ஏன் இவ்வளவு கடுமையாக இருந்தது என்பதைப் புரியவைத்தன.

நீதிமன்றம் இதன்மேல் விசாரணை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ரோட்னிகிங், சாலை விதிகளை மதிக்காமல் வாகனம் ஓட்டிய தவறுக்காக அவர் தண்டிக்கப்பட்டதாக போலீஸ் அதிகாரிகள் விசாரணையில் தெரிவித்தனர்.

போலீஸ் அதிகாரிகளின் விளக்கத்தை ஏற்காத நீதிமன்றம், அவர்களுக்கு 3 மாத காலம் சிறைத்தண்டனை அளித்தது. மேலும், காவல்துறை பணியிலிருந்து அவர்கள் நீக்கப்பட்டனர்.

ரோட்னிகிங்கிற்கு 38 லட்சம் டாலர் நஷ்டஈடு வழங்கப்பட்டது.

இந்த நல்ல தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு வீடியோ பதிவு முக்கிய சாட்சியாக அமைந்தது.

ரோட்னிகிங் தாக்குதல் சம்பவத்தில் வீடியோ பதிவின் முக்கியத்துவத்தையும் வீடியோ காமெரா சாதாரண மக்களுக்கு அதிகாரத்தை வழங்குவது பற்றியும் ''ஸீயிங் இஸ் பெலீவிங்'' (Seeing is beleving) என்ற டாக்குமெண்ட்ரிப் படம் நமக்குச் சொல்லுகிறது.

உலகின் பல பகுதிகளிலும் திரையிடப்பட்டு வருகிற இந்தப் படம், அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

வீடியோ கேமெராக்கள் உலகின் கண்களாக மாறிவருவதைப் பற்றியும் மனித உரிமைக்காகச் செயல்படுபவர்கள், மக்களுக்காக போராடுபவர்கள், பத்திரிகையாளர்கள், யுத்தகளத்தில் ராணுவங்களின் குற்ற நடவடிக்கைகளை விசாரிப்பவர்கள்-இவர்கள் கைகளில் வீடியோ கேமெரா என்ற சக்தி வாய்ந்த ஆயுதமேந்தி செயல்படுவதைப் பற்றியும் இப்படம் பதிவு செய்கிறது.

விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரு தயாரிப்பாளர்களே ''சமூக மாற்றத்திற்கான பணியில் ஹேண்டிகாம்கள் சிறந்த கருவியாக இருக்க முடியும்'' என்ற புரிதலுடன் தயாரிக்கின்றனர்.

கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், தகவல் அறிந்துகொள்ளும் உரிமை என பல உரிமைகள் பல்வேறு காலகட்டங்களில் தோன்றின.

நாம் அதனோடு சேர்ந்து இப்போது மக்களுக்கு உண்மையை தெரிவிக்கும் உரிமையை நிறுவியாக வேண்டும்.

# வீடியோ கேமரா விழாக்களை மட்டும் பதிவு செய்வதற்கல்ல...

■ கே.பி. பாலசந்தர்



படிப்பகம்

www.padippakam.com

அதை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்த ஒரு அடிப்படை உரிமை ஆக்குவதற்கு நாம் போராடியாக வேண்டும்.

ஆட்சியாளர்களின் அத்துமீறல்களை பதிவு செய்யும் வீடியோ பதிவுகள், உண்மையைத் தெரிவிக்கும் உரிமையோடு மிகவும் சம்பந்தப்பட்டதாகும்.

இந்த டாக்குமெண்டரிப்படம் இந்த விஷயங்களையெல்லாம் நமக்கு எடுத்துச் சொல்கிறது.

58 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்தப் படத்தை பீட்டர் விண்டோனிக், கேத்தரினா சிஜெக் (Peter Wintonic Keterina Cizek) இருவரும் இணைந்து இயக்கியுள்ளனர்.

பீட்டர் விண்டோனிக், உலகப் புகழ்பெற்ற டாக்குமெண்டரிப் படமான "ஒப்புதலை உருவாக்குதல்: நோம் சாம்ஸ்கியும் மீடியாவும்" என்பதை நமக்குத் தந்தவர். பல டாக்குமெண்டரிப் படங்களை இயக்கியவர்.

கேத்தரினா சிஜெக், மனித உரிமைகளைப் பற்றியும், தண்ணீர் பற்றாக்குறையைப் பற்றியும் பல டாக்குமெண்டரிப் படங்களை இயக்கியவர். கனடா ஒளிபரப்பு கழகத்தில்-வானொலி, தொலைக்காட்சி ஒலி ஒளிபரப்பில் பணியாற்றியவர். பத்திரிகையாளரும் கூட.

இந்த இரு இயக்குநர்களும் உலகின் பல பகுதிகளுக்குச் சென்றும், ஆவணக்காப்பகங்களுக்குச் சென்றும் இப்படத்திற்காக பல அரிய பதிவுகளை செய்தனர்.

உலகின் பல பகுதிகளில் வீடியோ கேமெராவுடன் சென்று முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளை பதிவு செய்து தீர்வுகண்டவர்களைப் பற்றி இப்படத்தில் நமக்கு சொல்லுகிறார்கள்.


அவைகளில் சில:

'காங்கோ' நாட்டில் 5 வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்ற யுத்தம் 30 லட்சம் உயிர்களை பலிகொண்டது. அந்த யுத்தம் முடிவுக்கு வராமல் தொடர்நதுகொண்டிருந்ததைக் கண்ட 'கிறிஸ்டியன் பிளைண்டு மிஷன்' அமைப்பைச் சேர்ந்த டேவிட் மெக் ஆலிஸ்டர், இதை உலகின் கவனத்திற்கு கொண்டு செல்லும்படி பல செய்தி நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். யாரும் அதை கண்டுகொள்ளவில்லை. பின்னர், தனது வீடியோ கேமெராவை கையில் எடுத்துக்கொண்டு யுத்தத்தின் கொடூரங்களையும் அழிவுகளையும் பெண்களும் குழந்தைகளும் அனுபவித்து வரும் சொல்லணாத் துயரங்களையும் முழுவதுமாகப் படமாக்கினார். பத்திரிகையாளர்கள், செய்தி நிறுவன பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்டி, தான் படமாக்கிய விஷயங்களை திரையிட்டுக் காட்டினார். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து சில செய்தி நிறுவனங்கள்-இது பற்றி எழுதின; ஒளிபரப்பின. பல அமைப்புகளினால், நெல்சன் மண்டேலா மற்றும் ஐ.நா.சபைத் தலைவர் கோஃபி அன்னான் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, அவர்கள் அமைதி நடவடிக்கைகளுக்கான முயற்சியில் இறங்கினர்.

.மெக்சிகோவில், மனநிலைக் காப்பகங்கள் என்று தங்களை அழைத்துக்கொண்டு-பெரும் நிதி உதவி பெற்றுக்கொண்டு-மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித சிகிச்சையும் அளிக்காமல்-பரிதாபமான சூழ்நிலையில் அவர்கள் நாட்களைக் கடத்திட நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். இதைக் கேள்வியுற்று அதிர்ச்சியடைந்த-மனநிலை பிறழ்ந்தவர்களின் உரிமைகளுக்கான சர்வதேச அமைப்பின் இயக்குநர் எரிக் ரோசன்தால், அந்த காப்பகங்களுக்குள் சென்று தனது வீடியோ கேமெரா மூலம் அங்குள்ள சூழ்நிலையை அப்படியே படமாக்கினார். இந்த பதிவுகளை ஏ.பி.ஸி செய்தி நிறுவனம் பார்த்து, பின் ஒளிபரப்பியது. பல மக்கள்அமைப்புகளும் பொதுமக்களும் கண்டனம்

# உயிர்த்தல்

-மீரா பழனி



கீற்று நிலவையும் . . .
காற்று உலுக்கும் மரத்தையும் . . .
சமீப காலமாய்ப் பார்த்த
நினைவு இல்லை

அமாவாசை பௌர்ணமி அறிய
நாட்காட்டியின் வட்டங்கள்.

வெப்பக் காற்றை வாரியிறைக்கும்
அறைவிசிறியின் சப்தத்தில்
மழை ஒலிகூட அமுங்கிப்போகிறது.
சாதாரணமாக... இப்போதெல்லாம்
தவிட்டுக்குருவிகளையோ...
மரங்கொத்திகளையோ...
காண இயல்வதில்லை...!

தலைமேல்... மனிதர்களைச்
சுமந்து வாழும்
அடுக்குமாடிக் குடியிருப்பின்
எந்த இடுக்கிலாவது
எப்போதேனும் வீசும்...
குளிர்ச்சியான காற்றில் தான்
உயிர்த்தபடி இருக்கிறது வாழ்வு!



படிப்பகம்

www.padippakam.com

தெரிவித்தனர். கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளான அரசு, இதில் தலையிட்டு ஆவன செய்வதாக உறுதியளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

.பிலிப்பைன்ஸில், மார்கோஸ் சர்வாதிகார ஆட்சியில், உள்ளூர் பழங்குடியின மக்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அந்த நிலங்களை பகாசுரக் கம்பெனிகள் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டன. அங்கு பெருமளவில் கரும்பு பயிரிடப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டது. விலங்குப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. 'நகமதா கூட்டணி' என்ற அமைப்பு அங்கு உருவாக்கப்பட்டு, பழங்குடி மக்களுக்கு தங்களது உரிமைகளைப் பற்றிய கல்வியறிவு புகட்டப்பட்டது. அவர்கள் அமைப்பு ரீதியாகத் திரண்டபோது அவர்களது மேல் தாக்குதல் நடத்தப்பட்டது. வீடியோ கேமெராவை பயன்படுத்துவதை ஒரு இயக்கமாகவே நடத்திவரும் ஜோயி லோசனா, அங்குசென்று பழங்குடி மக்களின் அவல நிலைமையையும், அவர்களது நிலங்களில் கரும்பு பயிரிடப்பட்டிருப்பதையும், வீடியோ கேமெராவினால் பதிவு செய்தார். நிலங்கள் பழங்குடி மக்களுத்தான் சொந்தமானவை என்பதற்கான ஆவணங்களை முழுவதுமாக பதிவு செய்தார். தன்னுடைய பதிவை பல மக்கள் அமைப்புகளுக்கும் திரையிட்டுக்காட்டினார். பின்னர் பழங்குடி மக்களுக்கு ஆதரவு பெருகியது. நிலங்கள் பழங்குடியின மக்களுக்குத்தான் சொந்தமானது என்பது நிரூபிக்கப்பட்டது.

இதுபோன்ற பல நடவடிக்கைகளைப் பற்றி இந்தப்படம் விவரிக்கிறது. சிலர் எந்தவித எதிர்ப்பையும் எதிர்கொள்ளத் தயாரான நிலையில் படம் பிடிக்கின்றனர். சிலர் ரகசியமான முறையில் படம் பிடிக்கின்றனர். தனி நபர் சாகசங்களைப் பற்றி மட்டும் இப்படம் நமக்குச் சொல்லவில்லை.

இது ஒரு இயக்கமாக்கப்பட வேண்டும் என்ற உறுதியுடன் செயல்படும் சில அமைப்புகளைப்பற்றியும் இப்படம் சொல்லுகிறது.

ரோட்னிகிங் தாக்குதல் சம்பவத்தில் வீடியோ டேப்பின் பங்கை கவனித்து உற்சாகமடைந்த இசை வல்லுநர் பீட்டர் கேபிரியல், இல்லியன் கால்டுவெல் மற்றும் சாம்கிரகோரி ஆகியோருடன் இணைந்து 'விட்னஸ்' என்ற அமைப்பை உருவாக்கினார். இது நியூயார்க் நகரத்தில் உருவாக்கப்பட்டது. இதில் பல அமைப்புகளும், பத்திரிகையாளர்களும், மனித உரிமைப் போராளிகளும் சாதாரண பொதுமக்களும் கூட இணைந்தனர். 'விட்னஸ்' அவர்களுக்கெல்லாம் வீடியோ கேமெராவை வழங்கியது. தொழில்நுட்பப் பயிற்சி அவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. 'விட்னஸ்' அமைப்பு ஒரு பலமான அமைப்பாக உருவாகி வருகிறது. எதிர்காலத்தில் இந்த அமைப்பினுடைய முக்கியத்துவம் அனைவராலும் உணரப்படும்.

பத்து பழங்குடியின மக்கள் குழுக்கள் இணைந்து 'நகமதா கூட்டணி' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இப்போது, 50 நாடுகளில் 150 குழுக்களுக்கு இந்த அமைப்பு விரிவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து குழுக்களுக்கும் வீடியோ கேமெராக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அக்குழுக்கள், வீடியோ கேமெராவை, தங்களது பாரம்பரிய சடங்குகள் நடத்தி மரியாதையுடன் பெற்றுக்கொள்கின்றனர்.

இதுபோன்ற அமைப்புகள் பல நாடுகளில் உருவாகி வருகின்றன.

சில வீடியோ பதிவுகள், உள்ளூர் நுகர்வோரின் பிரச்சனையை தீர்க்கின்றன; சில பதிவுகள் தேசிய பொதுக்கொள்கையையோ சட்டத்தையோ மாற்ற வழி செய்கின்றன. சில பதிவுகள் நீதிமன்றங்களில், யுத்தகளத்தில் ஏற்படும் கிரிமினல் குற்றங்களை விசாரிக்கும் மன்றங்களில் முக்கிய சாட்சியாக விளங்குகின்றன.

அனைத்து சமூக வீடியோ பதிவுகளும் பார்வையாளர்களை உண்மைக்கு மிக நெருக்கமாக கொண்டு செல்கின்றன.

துணிச்சலான சில பதிவுகள் உண்மைக்கான, நீதிக்கான, உரிமைகளுக்கான போராட்டத்தை வேகப்படுத்துகின்றன. மேலே சொன்ன அனைத்தும் இப்படத்தில் காட்சிகளாக நம் கண் முன்னே விரிகின்றன. (தெஹல்கா வீடியோ பதிவுகள் இந்திய அரசியலைக் கலக்கியது ஞாபகத்திற்கு வருகிறது)

'ஹேண்டிகாம் புரட்சி' என்பது பார்வையாளர்கள் என்ற நிலையிலிருந்து தயாரிப்பாளர்கள் என்ற நிலைக்கு மக்களை உயர்த்துவது பற்றியது.

சமூக மாற்றத்திற்கான போராட்டத்தை விரைவுபடுத்துவதற்கு, ஒரு மாறுபட்ட நடவடிக்கையில் நாம் ஈடுபட வேண்டிய அவசியத்தை "ஸீயிங் இஸ் பெலீவிங்" படம் வலியுறுத்துகிறது.

திருமண விழாக்களையும், குடும்ப விழாக்களையும் வீடியோ கேமெராக்கள் படமெடுத்தது போதும்! போதும்!

மக்களது ஆர்ப்பாட்டக் களத்தில் ஒரு போராட்டக்கருவியாக வீடியோ கேமெராக்கள் சுழன்று, சுழன்று படம் பிடிக்கட்டும். ஆட்சியாளர்களின் அத்து மீறல்களை அவை அம்பலப்படுத்தட்டும்.

இதுவே, இந்த டாக்குமெண்டரிப் படம் நமக்குச் சொல்லும் செய்தி.


படிப்பகம்

www.padippakam.com

# "தீண்டத்தகாத இந்துத்துவம்"

# டாக்டர் அம்பேத்கர்

■ மயிலை பாலு

*"நான் பிறப்பால் இந்துவாகப் பிறந்துவிட்டேன். ஆனால் நிச்சயம இந்துவாகச் சாகமாட்டேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்."*



1935-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் யேலா என்னுமிடத்தில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் அண்ணல் அம்பேத்கர் செய்தப் பிரகடனம் இது. இருபது ஆண்டுகளுக்குப்பின் இந்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றவும் செய்தார்.

1956-ஆம் ஆண்டு அக்டோபர் 14-ஆம் தேதியன்று நாகபுரியில் நடைபெற்ற ஒரு விழாவில் தன் குடும்பத்தாருடனும் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடனும் அம்பேத்கர் புத்தமதத்தில் சேர்ந்தார்.

ஆனாலும்-

1956-ஆம் ஆண்டு டிசம்பர் ஆறாம் தேதி மரணமடைந்த அம்பேத்கரின் உடல் டிசம்பர் ஏழாம் தேதி மாலைப் பொழுதில் லட்சோபலட்சம் மக்கள் முன்னிலையில் தாதர் இந்து சுடுகாட்டில் எரியூட்டப்பட்டது. புத்த பிட்சுகள் இறுதி நிகழ்ச்சிகளை நடத்த அம்பேத்கரின் மகன் யஷ்வந்த் சிதைக்கு எரியூட்டினார்.

புத்த மதத்துக்கு மாறினாலும் இந்து சுடுகாட்டில்தான் அம்பேத்கர் உடல் தகனம் செய்யப்பட்டது. காரணம் கிருத்தவர் அல்லாத இஸ்லாமியர் அல்லாத எல்லா இந்தியர்களும் இந்துக்கள் என்றுதான் சட்டம் சொல்கிறது.

இந்துமதத்தை இறுதி மூச்சுவரை எதிர்த்தாலும்-இந்துவாகச் சாகமாட்டேன் என்று உறுதி கூறினாலும்-இறுதியில் புத்த மதத்திற்கே மாறினாலும்-இந்து சுடுகாட்டில்தான் அம்பேத்கரின் உடலை எரியூட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றில் இதேபோல் மேலும் சில முரண்பாடான நிகழ்வுகளும் உள்ளன.

நாடு சுதந்திரம் அடைந்தபின் பாகிஸ்தானுக்கு ஒப்பந்தப்படி தரவேண்டிய 55 கோடி ரூபாயை உடனடியாகத் தந்துவிட வேண்டும் என்பது உள்ளிட்ட ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டார். பலகாலம் போராடிப் போராடி மிகவும் பலவீனப் பட்டிருந்த காந்திக்கு ஏதும் நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக அனைத்துக்கட்சிகளின் தலைவர்களும் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசை வலியுறுத்தும் கடிதத்தில் கையெழுத்திட்டனர். காந்தி கவனமாக ஆர்.எஸ்.எஸ். தலைவரும் இதில் கையெழுத்திட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதன்படி டில்லிப் பிரதேச ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதிகள் இதில் கையெழுத்திட்டனர்.

இருந்தாலும் என்ன? காந்தியின் இந்தக் கோரிக்கை வெற்றியால் ஆத்திரமடைந்த இன்னொரு ஆர்.எஸ்.எஸ். காரனான-இந்துமத வெறியனான நாதுராம் கோட்சே காந்தியைச் சுட்டுக்கொன்றான்.

ஆனால், இந்து மதத்தின் வருணாசிரம தருமத்தையும் சாதீயப் படிநிலைகளையும் உறுதியாக ஆதரித்த காந்தியை, இதற்கெல்லாம் புது விளக்கம் கொடுத்துப் பாதுகாக்கப் பெருமுயற்சி செய்த காந்தியை, ஈஸ்ரை அல்லா தேரே நாம்



படிப்பகம்

www.padippakam.com

என்று சொன்னாலும் மதமாற்றத்தை ஏற்றுக்கொள்ளாத காந்தியைக் காப்பாற்றியவர் அண்ணல் அம்பேத்கர்.

ஆட்சியதிகாரத்தில் தலித் மக்களுக்கு உரிய முக்கியத்துவம் கிடைக்க வேண்டும் என்றால் இரட்டைத் தொகுதி முறையும் இரட்டை வாக்குரிமையும் வேண்டும் என பிரிட்டிஷ் ஆட்சியிடம் வாதாடினார் அம்பேத்கர். ஆனால் இந்துக்களில் ஒரு பகுதியினராகிய ஹரிஜன்களைத் தனியாகப் பிரிப்பதை ஏற்க மாட்டேன் என்று கூறி இந்தக் கருத்தை அம்பேத்கர் மாற்றிக்கொள்ள வற்புறுத்தி எரவாடா சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டார் காந்தி. அம்பேத்கர் தனது கொள்கையில் உறுதியாக இருந்தபோதும் உண்ணாவிரதத்தால் காந்தியின் உயிருக்கு ஆபத்து என்ற நிலை ஏற்பட்டபோது இளகிப்போனார். இரட்டைத் தொகுதி, இரட்டை வாக்குரிமை என்ற கோரிக்கையை கைவிட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இதன் மூலம் காந்தியைக் காப்பாற்றினார். இதுதான் பூனா ஒப்பந்தம் என்று இன்றளவும் பேசப்படுகிறது.

அம்பேத்கர் அன்று கைவிட்ட கோரிக்கையை இன்று மீண்டும் எழுப்பப்போவதாக சில தலித் இயக்கங்கள் கூறுகின்றன. இது அரசியல் ரீதியான பரிசீலனைக்குரியது.

பூனா ஒப்பந்தம் கையெழுத்தானபோது ராஜாஜி தனது பேனாவை அம்பேத்கரிடம் கொடுத்துவிட்டு அவரது பேனாவை தான் வைத்துக்கொண்டாராம். ராஜாஜி கொடுத்த பேனாவால்தான் அரசியல் சட்ட நகலை அம்பேத்கர் எழுதியிருப்பார்போலும். ஏனெனில் ஆளும் வர்க்க சார்பு அதில் அதிகரித்துக் கிடக்கிறது. பா.ஜ.க. தலைமையிலான அரசு அமைத்த அரசியல் சட்ட மறு ஆய்வுக்குழுவும்கூட பெரிய மாற்றங்கள் எதையும் செய்ய இயலாமல் ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்திருப்பதும்கூட இந்த அடிப்படையில்தானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்னும் சொல்லப்போனால் அம்பேத்கரே பின்னாளில் இதனை அங்கீகரித்திருக்கிறார். "நீங்கள்தானே அரசியல் சட்டத்தை உருவாக்கியவர் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லும் பதில், நான் ஒரு சவாரிக் குதிரை. நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறப்பட்டேனோ அதை என்னுடைய விருப்பத்திற்கு எதிராகவே செய்தேன்" என்று அம்பேத்கர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். இன்னும் ஒருபடி மேலே போய், "அந்த அரசியல் சட்டத்தை எரிக்கும் முதல் நபர் நானாகத்தான் இருப்பேன். அது எனக்குத் தேவையில்லை. அது யாருக்கும் பொருந்தவில்லை" என்றும் கூறினார்.

அம்பேத்கரின் இந்த மனநிலையைக் கணக்கில் வைத்துப்பார்க்கும்போது ஆனந்த் டெல்டும்ப்டே என்ற ஆய்வாளர் முன்வைத்துள்ள கருத்தும் இங்கு சிந்திக்கத்தக்கது.

"இந்திய ஆளும் வர்க்கம் நாசூக்கான உத்திகளால் பல ஆயிரம் ஆண்டுகளாக தலித் மக்களை சாதிய தளைக்குள் வைத்துள்ளது. இந்த விஷயத்தில் அது கைதேர்ந்தது என்ற மறைக்க முடியாத பெருமையைப் பெற்றுள்ளது. வேறு பல உட்காரணங்கள் இருந்தாலும், இந்திய அரசியல் நிர்ணய சபையின் தலைவராக அம்பேத்கரை நியமித்ததில் இந்தத் தந்திர அணுகுமுறையின் கூறு நிச்சயமாக இருந்தது... இந்த அணுகுமுறையால் அரசியல் சட்டத்திற்கு தலித்துகள் கட்டுப்பட வேண்டியதாயிற்று. அவர்களிடம் தவறான மன உணர்வு வளர்க்கப்பட்டது. உலக அரங்கில் இந்திய ஆளும் வர்க்கம் தன்னை முற்போக்கானதைப் போல் காட்டிக்கொண்டது. இவ்வாறு இந்திய அரசியல் சட்டம் ஆளும் வர்க்கங்களால் தீர்மானிக்கப்பட்டாலும் ஆளப்படும் வர்க்கம் அதற்குச் சொந்தம் கொண்டாடியது."

தந்தை பெரியாரின் வைக்கம் போராட்டத்தால் ஈர்க்கப்பட்ட அம்பேத்கர், 1927-ஆம் ஆண்டு நாசிக் நகரில் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தினார். ஆனால் கோயில் நுழைவுப் போராட்டம் தலித் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்திடுமா? தேவைகளைப் பூர்த்தி செய்திடுமா? வாழ்நிலையை உயர்த்திடுமா? என்ற கேள்விகள் அவருள் எழுந்திருக்கக்கூடும். வராதே என்பவர்களோடு ஏன் மல்லுக்கட்ட வேண்டும் என்றும் எண்ணியிருப்பார் போலும். இதனால்தான் 1933-ஆம் ஆண்டு தலித் மக்களின் ஆலயப் பிரவேசப் போராட்டத்திற்கு அம்பேத்கரின் ஆதரவை காந்தி கோரியபோது அதனை நிராகரிக்கிறார்.

"மானுட ஆளுமையின் புனிதத்தன்மையை மதிக்காமலிருப்பது மோசமான நடைமுறை என்று நீங்கள் நினைத்தால் உங்கள் கோயில்களைத் திறந்துவிடுங்கள். கண்ணியமானவராய் இருப்பதைக் காட்டிலும் இந்துவாக இருப்பதுதான் உங்களுக்கு முக்கியம் என்றால் கதவைச் சாத்திக்கொண்டு நாசமாய்ப் போங்கள். அங்கு வரவேண்டும் என்ற கவலை எனக்கில்லை" என்று முகத்திலடித்தாற்போல் சொல்லிவிடுகிறார்.

இருப்பினும் ஆதிக்க சக்திகளை எதிர்கொள்வதற்கான ஆயுதங்களில் ஒன்றாகக் கோயில் நுழைவுப் போராட்டம் இருப்பதன் அவசியம் குறைந்துவிடவில்லை; மேலும் கூர்மைப்படுத்த வேண்டியுள்ளது.

காந்தியைப் பல விஷயங்களில் கடுமையாக எதிர்த்த அம்பேத்கர் அவரது வாழ்க்கை முறையிலும் மாறுபட்ட கருத்து கொண்டிருந்தார் என்று சொல்லப்படுகிறது. உலகமே தொழிற்புரட்சியில் மாறிக்கொண்டிருந்தபோது காந்தி கைராட்டை மூலம் சுதேசியத்தை மெருகூட்டிக் கொண்டிருந்தார். எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து சோஷலிசப் புரட்சி நடந்திருந்த நிலையில் காந்தி அணிந்திருந்ததையும் இழந்துவிட்டு அரை நிர்வாணப் பக்கிரியானார். இது, ஏதும் இல்லாதவனுக்கு ஏற்பட வேண்டிய மனவெழுச்சியை மழுங்கடித்ததா அல்லது வசதியாக வாழ்ந்தவர்களைத் தியாகம் செய்யத் தூண்டியதா என்பது மறுபரிசீலனைக்குரியது.

ஆனால், "காந்தியின் நவீனத்துவ எதிர்ப்புக்கு எதிராகவும் தன்னை நவீனத்துவத்தின் பிரதிநிதி என்று அடையாளம் காட்டவும் காந்தியின் எளிய துறவறப் போக்கிற்கு எதிர்ப்பாகவும் அம்பேத்கர் மேல்நாட்டு நாகரிக உடையணிந்தார்" என்ற கருத்தும் உள்ளது.

மறுபக்கத்தில் விஞ்ஞான பூர்வமாக மனித குலமேம்பாட்டுக்கும் வாழ்க்கை வசதிக்கும் வழிகாட்டிய


படிப்பகம்

www.padippakam.com

மார்க்சியத்தை அம்பேத்கர் எதிர்த்தார் என்றும் தொழிற்சங்கப் போராட்டங்களைச் சாதியின் பேரால் சீர்குலைத்தார் என்றும் குற்றச்சாட்டு உண்டு. இது அரைகுறைப் பார்வையால் வரும் கோளாறு.

1929-ஆம் ஆண்டு பம்பாயில் நெசவாலைகளில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதனை அம்பேத்கர் எதிர்த்தார் என்பதும் இதனால் தலித் பிரிவு தொழிலாளர்கள் இதில் பங்கேற்காமல் ஒதுங்கி இருந்தார்கள் என்பதும் உண்மைதான்.

ஆனால் இதே அம்பேத்கர் 1938-ஆம் ஆண்டு தொழில் தகராறு மசோதாவை எதிர்த்து பம்பாயில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் சேர்ந்து ஆதரித்தார் என்பதும் அவர்களுடன் கூட்டாகப் பிரச்சாரம் செய்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

சோஷலிசப் புரட்சியில் வன்முறை இருப்பதாகப் புரிந்துகொண்டதாலோ புரட்சிக்கான போராட்ட வடிவத்தை, எதிரிதான் தீர்மானிக்கிறான் என்று லெனின் கூறியதை கவனத்தில் கொள்ளாததாலோ அரசியல் சட்டத்தின் வழி சோஷலிச சமுதாயம் என்ற கோட்பாட்டை அவர் முன்வைத்தார். இதற்கு அரசு சோஷலிசம் (State Socialism) என்று பெயரும் வைத்தார்.

எல்லோருக்கும் ஆயுள் காப்பீடு வேண்டும் நிலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கூட்டுப்பண்ணை முறையைச் செயல்படுத்த வேண்டும் என்பவை உள்ளிட்ட பத்து அம்ச திட்டத்தையும் அம்பேத்கர் முன் வைத்தார்.

இதெல்லாம் இருந்தாலும் இந்தியச் சூழலில் பொருளாதார சமத்துவத்துக்கான போராட்டத்தைவிட சமூக சமத்துவத்துக்கான போராட்டமே முக்கியமானது என்று அவர் கருதினார். சோவியத் யூனியனில் தொழிலாளி வர்க்கத் தலைமையில் புரட்சி வெற்றிபெற்று இரண்டாம் உலகப் போருக்குப்பின் மேலும் பல நாடுகளிலும் சோசஷலிசக் குடியரசுகள் ஏற்பட்ட நிலையில் 1949-ஆம் ஆண்டு இந்தியாவின் எல்லைப் பகுதியில்-சீனாவில் சோஷலிசப் புரட்சி வெற்றிபெற்ற நிலையில்-இந்தியாவிலும் புரட்சி வெடிக்கும் என்று அவர் எண்ணியிருப்பார் போலும். இருப்பினும் இதனை வெளிக்காட்டிக்கொள்ளாமல் இந்தியாவில் புரட்சி ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னதையோடு, "புரட்சிக்கு முன்னால் சாதிப் பிரச்சனையை கணக்கில் கொள்ளத் தவறினால், புரட்சிக்குப் பின்னால் (சோஷலிஸ்டுகள்) சாதிப் பிரச்சனையைக் கையாள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியே தீருவார்கள். அதாவது, நீங்கள் எந்தத் திசையில் சென்றாலும் சாதி அரக்கன் வந்து வழி மறிப்பான். இந்த சாதி அரக்கனை ஒழிக்காமல் அரசியல் சீர்திருத்தத்தையோ பொருளாதார சீர்திருத்தத்தையோ செய்ய முடியாது" என்றும் எச்சரிக்கை செய்கிறார்.

அம்பேத்கரின் இந்தக் கருத்தோட்டம் பற்றி பழுத்தத் தொழிற்சங்கவாதியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராய் இருந்தவருமான பி.டி.ரணதிவே பீப்பிள்ஸ் டெமாக்ரசி இதழின் கேள்வி பதில் பகுதியில் கூறியுள்ள கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

கேள்வி: அத்பேத்கர் இயக்கமானது எதார்த்தத்தில் தொழிலாளி வர்க்க இயக்கத்தைச் சீர்குலைத்தது என்று கூறுவது சரியாகுமா?

பி.டி.ரணதிவே: அதில் சந்தேகமில்லை. ஆனால் அது சரியான வார்த்தைகளில் கூறப்படவேண்டும். அம்பேத்கருடைய இயக்கமானது தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திலிருந்து அன்னியப்படுத்திவிட்டது. ஓரளவிற்குத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்தும் அன்னியப்படுத்திவிட்டது. எதார்த்தத்தில் அதன் விளைவு இதுதான். ஆனால் வரலாற்று ரீதியாகப் பரிசீலிக்கும் பொழுது ஒரு அம்சத்தைக் காண வேண்டும். அதாவது இந்தப் பழியைச் சுமத்துவது சரிதானா என்ற அம்சத்தைக் காண வேண்டும். ஒரு கொத்தடிமைச் சமூகமானது கொத்தடிமையாய் இருக்கும் கொடுமையைக் காட்டிலும் அதிகமாக நவீன முதலாளித்துவச் சுரண்டலின் கொடுமையை உணர முடியுமா?

அம்பேத்கரின் எழுத்துக்கள் செயல்பாடுகள் இயக்கங்கள் என அனைத்தையும் இந்த மார்க்சியக் கண்ணோட்டத்தோடு பரிசீலிக்க வேண்டியுள்ளது.

கொத்தடிமையாய் இருக்கும் கொடுமைக்கு முன்னால் முதலாளித்துவச் சுரண்டல் அனுபவம் பெரியதல்ல என்பதற்கு அம்பேத்கரே ஒரு உதாரணமாகத் திகழ்ந்தார். அவரது வாழ்க்கைப் பதிவுகளைப் பார்த்தால் இது துல்லியமாகப் புரியும்.

பத்து வயதில் பள்ளிக்குச் சென்றபோது எல்லோருக்கும் பலகை கொடுத்து இவருக்கு மட்டும் சாக்குத்துணி கொடுக்கப்பட்டபோது-

எச்சில் மேலே தெறித்துவிடும் என்பதால் ஆசிரியரிடம் சந்தேகம் கூட கேட்கக்கூடாது என்றபோது-

தீட்டுப்பட்டுவிடும் என்பதால் விடைத்தாள்களைக்கூட உயர்சாதி ஆசிரியர்கள் தொடாதபோது-

உயர்சாதி மாணவர்களின் டிபன் பாக்ஸ்கள் கரும்பலகைக்குப் பின்னால் வைக்கப்பட்டிருந்ததால் அதன் அருகேயும் செல்லக்கூடாது எனத் தடுக்கப்பட்டபோது-

பானையிலிருந்து தண்ணீர் மொண்டு குடிக்க முடியாமல் உயர்சாதி மாணவர்கள் குவளையில் மொண்டு ஊற்ற குனிந்து அதனை இரு கைகளையும் குவித்து பிடித்துக் குடிக்க வேண்டும் என்ற அனுபவத்தின்போது-

தான் யார் என்பதை அறியாமல் வண்டியில் ஏற்றிக்கொண்டாலும் தலித் என்று தெரிந்தபின் வண்டியோடு குடைசாய்க்கப்பட்டபோது-

சமஸ்கிருத மொழி படிக்கஆசையிருந்தாலும் அதனைப் படிக்க அனுமதி மறுத்ததாலேயே பாரசீக மொழி படிக்கும் கட்டாயம் ஏற்பட்டபோது-

அம்பேத்கரின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? அவமானமும் இழி நிலையும் எப்படி வாட்டி வதைத்திருக்கும்? பள்ளிப்பருவத்தில் மட்டும்தானா இந்த நிலை? படித்து ஆளாகி வேலைக்குச் சென்றபிறகும் அதுவும் கெய்க்வாட் மன்னர்



படிப்பகம்

www.padippakam.com



அரண்மனையில் ராணுவச் செயலாளராகப் பணியில் நியமிக்கப்பட்டபிறகும் உயர்சாதியைச் சேர்ந்த கடைநிலை ஊழியர்கள் கூட மதிக்காதபோது மனம் எப்படிக் குமைந்திருக்கும்? கோப்புகளைக்கூட அருகே வந்து மேசை மீது வைக்காமல் தூரத்திலிருந்து போட்டுவிட்டுப் போனால் உள்ளம் எப்படி பதைபதைத்திருக்கும்?

இந்த நிலை அவர் வழக்கறிஞரான பிறகும் நீடித்தது. தலித் என்ற காரணத்திற்காக உயர்சாதிக்காரர்கள் வழக்குகளைக்கூட தர மறுத்தனர்.

தான்பட்ட இத்தனை அவமானங்களுக்கும் தனக்கு நேர்ந்த இத்தனை அவலங்களுக்குமான காரணத்தை ஆராயத் தொடங்கினார் அம்பேத்கர். மனிதர்களிலேயே ஒரு பிரிவினர் தீண்டக்கூடாதவர்கள், இன்னொரு பிரிவினர் நெருங்கக்கூடாதவர்கள், மற்றொரு பிரிவினர் காணவும் கூடாதவர்கள் என்று விலங்குகளிலும் கேவலமாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பதை அவர் அறிந்தார்.

கசப்பான இந்த அனுபவங்களின் அடிப்படையில்தான், "உலகிலுள்ள அடிமைச் சமுதாயங்கள் அனைத்துக்கும் நானே தலைவன் என்று கூறவில்லை. தீர்க்கப்படவேண்டிய வேறுபல பிரச்சனைகள்-கொடுமைகள் நம்நாட்டில் இல்லையென்றும் நான் கூறவில்லை. ஆனால் மனிதன் தன் வாழ்நாளில் எந்த அளவுக்குப் பணியாற்ற முடியும் என்பதை உணர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனைகளை மட்டும் நான் எடுத்துக்கொள்கிறேன்" என்றார்.

இந்த முடிவின் அடிப்படையில்தான் அவர் பணியைத் தொடங்கினார். தீண்டாமைக்கொடுமையினைத் தோண்டித் தோண்டி அதன் ஆணி வேரைக் கண்டறிந்தார்.

உலகில் எந்த நாட்டிலும் இல்லாத சாதீய அவலம் இந்தியாவில்தான் ஆக்டோபஸ்போல் கால்களைப் பரப்பி கவ்விப் பிடித்துக்கொண்டிருக்கிறது. தலித் மக்களைச் சுழற்றிக் கசக்குகிறது. இந்தச் சாதீயம்தான் மனிதர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வை நீடித்து நிலைத்திருக்க வைக்கிறது. சாதீயமும் ஏற்றத்தாழ்வும் இயற்கையாய்த் தோன்றி இறுகிப்போனவையல்ல. இவை இந்துயிசத்தின் வளர்ப்புப் பிள்ளைகள்.

"சாதிதான் இந்துக்களின் உயிர்மூச்சாக இருக்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்துக்கள் இந்தத் தேசம் முழுவதையும் சாதி அமைப்பால் மாசுபடுத்திவிட்டார்கள்" என்ற அம்பேத்கரின் நிர்ணயிப்பு இன்றைக்கும் பொருத்தமாகவே இருக்கிறது. இதிலே அவர் இந்துக்கள் என்று பொதுப்படையாகச் சொன்னாலும் வர்ணாசிரமத்தை விடாது பிடித்துக்கொண்டிருக்கிற உயர்சாதியினரையே அது சிறப்பு சுட்டாகக் கொண்டிருக்கிறது எனலாம்.

"உண்மையில் இந்திய வரலாறு நெடுக நாடு கண்ட பெரும்பாலான தோல்விக்கான காரணம் சாதியே. பொது நடவடிக்கைக்கு மக்கள் ஒன்று திரள்வதைச் சாதி தடுக்கிறது. அல்லது மக்கள் திரள்வதன் எல்லையை அது குறுக்குகிறது. சத்திரியர்கள் மட்டுமே போரிட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. பார்ப்பனர்களும் வைசியர்களும் ஆயுதம் ஏந்தவில்லை. பெரும்பான்மையினரான சூத்திரர்கள் கையில் ஆயுதம் இல்லை. இதன் விளைவு ஒருசிறு கும்பலான சத்திரியர்கள் தோல்விக்குள்ளானபோது இந்த நாடு முழுக்கவே அன்னிய எதிரியின் காலடியில் விழ வேண்டியிருந்தது" என்று பல காலகட்டங்களில் பலருக்கும் நாடு அடிமைப்பட்டதற்கும் சாதிய அமைப்புதான் காரணம் என்று மாற்று கோணத்திலான சிந்தனையை முன் வைக்கிறார் அம்பேத்கர்.

தொழில் வளர்ச்சி ஏற்படாமல்போனதற்கும் ஆராய்ச்சி மனப்பான்மை இற்றுப்போனதற்கும்கூட இந்தச் சாதீய அமைப்புதான் காரணம் என்பது அவரின் கருத்தாக உள்ளது. சாதி காரணமாகப் பரம்பரைத் தொழிலைத் தவிர வேறு விருப்பப்பட்ட தொழிலைத் தேர்வு செய்ய முடியாத நிலைமை. மேலும் பல தொழில்கள் அல்லது வேலைகள் இழிவாகப் பார்க்கப்பட்டதால் அவற்றில் ஈடுபட்டிருந்தோர்க்கு அவற்றின் மீதே ஏற்பட்ட வெறுப்பு. அவற்றிலிருந்து எப்போது விடுபட்டு ஒழிவோம் என்றிருந்த ஏக்கம். அடுத்தாற்போல் உடலுழைப்பு சாராத, தொழில்களோடு தொடர்பில்லாத உயர்சாதியினருக்குக் கல்வி அனுமதிக்கப்பட்டது. ஆனால் உழைப்பில் ஈடுபட்டிருந்த சூத்திரர்களுக்கு அறிவைப் பண்படுத்திக்கொள்ளும், வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பு மறுக்கப்பட்டது.

இந்தக் கல்வி மறுப்பு என்பது இந்திய சமூகத்தின் பெரும்பகுதியினரைச் சிந்திக்க விடாமல் முனை மழுக்கியது. இதனால்தான் மேலை நாடுகளைப் போல் இந்தியாவில் சமூகப் புரட்சி ஏற்பட வாய்ப்பில்லாமல்போனது என்றும் அம்பேத்கர் கருதுகிறார்.

"உலகத்தில் ஏனைய நாடுகளில் சமூகப் புரட்சிகள் நடந்திருக்கின்றன. இந்தியாவில் ஏன் சமூகப் புரட்சி நடக்கவில்லை என்ற கேள்வி ஓயாது என்னைத் துன்புறுத்தி வருகிறது. கீழ்வகுப்பு இந்துக்கள் நேரடி நடவடிக்கைகளில் இறங்க முடியாதபடி இந்தக் கேடுகெட்ட நால்வர்ண முறை அவர்களை முடமாக்கிவிட்டது என்ற ஒரே பதில்தான் என்னால் தரமுடியும்.... நால்வர்ண முறையின் காரணமாக அவர்களால் கல்வி கற்க முடியாது; தங்கள் மீட்சி குறித்து அல்லது அதற்கான வழிமுறை குறித்து அவர்களால் சிந்திக்க முடியாது. அவர்கள் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்... நிரந்தரமான அடிமைத்தனத்தோடு பிணைக்கப்பட்டது தங்களுடைய தப்பிக்க முடியாத தலைவிதி என்று அவர்களை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்திருக்கிறார்கள்" என்பது அவரின் எண்ணம்.

அம்பேத்கர் போன்ற தன்னலமற்றத் தலைவர்களின் இடைவிடாத போராட்டத்தின் பயனாகவும் அரசியல் நிர்ணய



படிப்பகம்

www.padippakam.com

சபையின் தலைவராக இருந்து தலித் மக்களுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீட்டினை வாதாடிப் பெற்றுத்தந்ததாலும் மறுக்கப்பட்ட கல்வி ஓரளவு கிடைத்திருக்கிறது. வரையறுக்கப்பட்ட தொழிற்சிறையிலிருந்து கணிசமானவர்கள் விடுதலையடைந்திருக்கிறார்கள். இருப்பினும் கல்வியையும் வேலை வாய்ப்பையும் பெற்றவர்கள் தங்களை தலித் மக்களிலேயே மேல் தட்டில் இருப்பவர்களாகக் கருதிக்கொள்ளும் போக்கு உள்ளது. இதனால் அன்றுபோலவே இன்றும் கல்வியின்றி வேலையின்றி கோடிக்கணக்கானவர்கள் அடித்தட்டில் நிற்கின்றனர். எனவே நாடாளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்கு இவர்களை வாக்கு வங்கிகளாகப் பயன்படுத்திக்கொள்ள அரசியல் கட்சிகள் போட்டிபோடுகின்றன.

இவர்களுக்குக் கைகொடுத்து மேலே தூக்க வேண்டியவர்கள் எட்டிப்பார்த்து தங்களின் உயர்வு மட்டும் எண்ணி இறுமாந்து ஒதுங்கிவிடுகிறார்கள். விதியை எதிர்த்து வீதிக்கு வந்து போராட பெரும்பாலான தலித் மக்கள் தயாராக இருந்தபோதும் இதேபோல் ஒடுக்கப்பட்டு கிடக்கும் இதரபகுதி மக்களுடன் ஒட்டவிடாமலும் பார்த்துக்கொள்ளப்படுகின்றனர். இதற்கு ஒரு சில தலித் தலைவர்களும் உடந்தையாய் உள்ளனர்.

இதனைப் பயன்படுத்திக்கொண்டு "ஆளும் வர்க்கங்கள் எல்லாத்துறையிலும் தலித் மக்கள் பிளவுபடுவதை ஊக்கப்படுத்துகின்றன. அவர்கள் தலித் அரசியல் தலைவர்களுடன் கூட்டு வைத்துக்கொள்வதை விரும்புகிறார்கள். அம்பேத்கரின் வழித்தோன்றல்கள் சிலரைத்தேர்ந்தெடுத்து வளர்த்துவிட்டு தலித் மக்களிடையே அரசியல் ஒருங்கிணைப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறார்கள்" என்ற கருத்து சரிதான் என்பதை இந்தத் தேர்தலில்கூட தலித் மக்களின் காவலர்கள் என்போர் நிரூபித்துள்ளனர்.

மராத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பல்கலைக்கழகம் எனப் பெயர்மாற்ற முடியாதென முரண்டு பிடித்தவர்களோடு மகாராஷ்ட்ராவில் அணிசேர்ந்திருக்கும் அவலம் நேர்ந்துள்ளது. ஜெய்பீம் ஜெய் அம்பேத்கர் என்பதோடு ஜெய் சக்தி என்பதையும் கலந்து திருதராஷ்ட்ர ஆலிங்கனம் செய்யப்படுகிறது. மீண்டும் நசுங்கப்போகிறவர்கள் ஏற்கெனவே நசுக்கப்பட்ட மக்கள்தான்.

ஒட்டுமொத்த இந்திய சமுதாயத்தையே உருப்படாமல் செய்த சாதீய ஏற்றத்தாழ்வுகளை கெட்டிப்படுத்தி தனது மனுநீதி அதிகாரத்தை ஜனநாயக அமைப்பிலும் தக்க வைத்துக்கொள்ள சகல தந்திரங்களையும் செய்கிற இந்துத்வா சக்திகள் பற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே அம்பேத்கர் இப்படி எச்சரித்திருக்கிறார்.

"இவர்கள் நாவிலே ராமனையும் கைகளிலே கூர்வாளையும் வைத்திருப்பார்கள். யோகிகளைப் போன்று பேசுவார்கள். ஆனால் கொலைகாரர்களாக நடந்துகொள்வார்கள். கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறான் என்பார்கள். ஆனால் விலங்கிலும் கேவலமாக மனிதனை நடத்துவார்கள். இவர்களுடன் சேராதீர்கள். இவர்கள் மிகக் கொடிய வஞ்சனையாளர்கள். எறும்பிற்குச் சர்க்கரை உணவிடுவார்கள்; ஆனால் இங்குள்ள மனிதர்கள் குடிப்பதற்கு நீரெடுக்கவும் தடை விதிப்பார்கள். இவர்களுடன் தொடர்பு கொள்ளாதீர்கள்."

இந்த எச்சரிக்கையைத் தலைவர்கள் புறந்தள்ளிவிட்டுப் போனாலும் தலித் மக்கள் நெஞ்சில் பதிக்க வேண்டும். ஆதிக்கக்காரர்களை எதிர்த்த களப் போராட்டத்திலும் தத்துவப் போராட்டத்திலும் வஞ்சிக்கப்படும் தலித் மக்களும் ஓரளவு சமுதாய உரிமைகள் பெற்றுள்ளபோதும் பொருளாதார நிலையில் இன்னமும் ஒட்டுக்கோவணம் கட்டியவர்களாகவே இருக்கிற ஏனைய பகுதி மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

தீண்டாமையும் சாதிக்கொடுமைகளும் தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பட்ட பிரச்சனை அல்ல. அது ஒட்டுமொத்த இந்தியாவின் சமூகப் பிரச்சனை. அம்பேத்கரும் கூட தலித் மக்கள் உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் மட்டுமே போராடியவர் அல்ல. ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் நலனும் அவரது போராட்டத்தில் சூல் கொண்டிருந்தது.

"அம்பேத்கரின் தொடர் நடவடிக்கைகளை உற்றுநோக்கும் போது தேசியப் பிரச்சனைகளிலும் அனைவருக்குமான நலனிலும் அக்கறை கொண்டவர். இச்சமூகத்தில் ஒடுக்குமுறைக்கு ஆளாகிய தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலையை நோக்கி சுயநலமிகுந்த இந்துக்களை எதிர்த்துப் போராடிய தேசப்பற்று மிகுந்த மிகப்பெரிய போராளி என்று அம்பேத்கர் சித்திரம் கொள்கின்றார். இவரது நடவடிக்கைகள் எவற்றிலும் தாழ்த்தப்பட்டவர்களைத் தொடர்ந்து தனி அலகாக நிலை நிறுத்தும் போக்கு காணப்படவில்லை" என்பதை எழுத்தாளர் சிவகாமி சுட்டிக்காட்டுகிறார்.

சிலரின் சுயநலத்துக்காக தலித் மக்களைத் தனியாகப் பிரித்து ஆளும் வர்க்கங்களின் வேலையை எளிதாக்கிவிடக்கூடாது என்பதுதான் அம்பேத்கரின் பிறந்த நாளில் நெஞ்சில் நிறுத்த வேண்டியதாகும்.

இந்துத்துவம் வளர்ந்துவரும் இன்றையச் சூழலில் அண்ணல் அம்பேத்கரின் ஆய்வு முடிவுகளை மக்களிடம் கொண்டு செல்லும் கடமை நமக்குண்டு.

அம்பேத்கர் ஒரு பக்கமல்ல.

இந்திய வரலாற்றின் சகாப்தம்.


**கட்டுரை எழுதப் பயன்பட்ட நூல்கள்**

1) இந்துயிசத்தின் தத்துவம்
   - டாக்டர் அம்பேத்கர்
2) முசுலீம்கள் குறித்து டாக்டர் அம்பேத்கர்
   - ஆனந்த் டெல்டும்ப்டே
3) சாதி ஒழிப்பு - டாக்டர் அம்பேத்கர்
4) பார்ப்பனியத்தின் வெற்றி - டாக்டர் அம்பேத்கர்
5) அம்பேத்கருக்குப் பிந்தைய தலித் இயக்கங்கள்
   - ஆனந்த் டெல்டும்ப்டே
6 நள்ளிரவில் சுதந்திரம்
   - டொமினிக் லேப்பியர், லேரி காலின்ஸ்
7 **B.R. Ambedkar - Man and his Vision**
   *- V. Chandra Mowli.*




படிப்பகம்

www.padippakam.com



# அவன்

■ சி.வி. வடிவேலு

வானம் நீலமாய் தெளிந்திருக்க, திருதிருவென கீழ் இறங்கிய சித்திரை மாத வெயில் பூமியை வறுத்தெடுத்துக்கொண்டிருந்தது. அகன்றதொரு அத்தி மரத்தின் நிழலில் அந்த 'அன்னை தெரஸா' என்கிற முதியோர்களுக்கான இல்லம் சற்றே குளிர்ந்திருந்தது. மரத்தடியிலிருந்த நீண்ட சிமெண்ட் இருக்கையில் சுந்தரமூர்த்தி உட்கார்ந்திருந்தார். மெலிந்த தேகம். நிறைய நரைத்திருந்தார். குறுக்கும், நெடுக்குமாக கீறல்கள் விழுந்த மூக்கு கண்ணாடிக்குள் அவருடைய பார்வை அமைதியாய் விழித்திருந்தது.

அருகாமையில் 'தெரஸா' இல்லத்தின் மானேஜரான ஜோசப், கருணையோடு அவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

"என்னோட மனைவி இருந்திருந்தா, நான் இங்க வந்திருக்கவே மாட்டேன். ஆச்சு... அவ செத்துப் போயி மூணு வருஷமாச்சு. ஆனா நான் துளிகூட நினைச்சே பார்க்கலே. எனக்கு இந்தகதி வரும்னு. அவ இறந்த அடுத்த வருஷமே என்னோட மூத்த பையன் சண்டை போட்டுக்கிட்டு யாரோ ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு வெளிநாட்டுக்குப் போயிட்டான். கடைசி காலத்தில என்னோட அவன் இருப்பான்னு ரொம்பவே எதிர்பார்த்தேன்.

சுந்தரமூர்த்தியின் கண்களில் நீர் கசிந்தது.

"ஏதோ எனக்கு கிடைச்சிட்டிருந்த பென்ஷன் பணத்தை வெச்சுகிட்டு இரண்டாவது பையனோட இருந்திட்டுருந்தேன். காலேஜ்ல படிச்சிட்டிருந்தான். அவனும் இப்ப என்னோட இல்ல."

"ஏன் சார்?!" ஆதங்கத்தோடு ஜோசப் கேட்டார்.

"அவன் இப்ப இருக்கிற இடமே தெரியல. போதை பொருளுக்கு அடிமையாகி, புத்தி பேதலிச்சுப் போச்சு. ஆஸ்பிடல்ல சேர்த்து பார்த்தேன். எல்லா ட்ரீட்மென்ட்டும் கொடுத்தாங்க. திடீரென்று ஒரு நாள் அவன காணல. எங்க போனான்னு தெரியல. எல்லாமே திசை மாறிப்போச்சு. அதுக்கப்புறம், என்னால-தனியா..."

சுந்தரமூர்த்தியால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. அழ ஆரம்பித்துவிட்டார்.

"சார், உங்களோட கவல எனக்கு புரியறது. கடவுள் உங்கள கை விடமாட்டார் சார். காட் இஸ் கிரேட்."

ஜோசப் ஆறுதல் அளித்தார். சுந்தரமூர்த்தி கைக்குட்டையால் கண்களைத் துடைத்தபடி தன் பேச்சை தொடர்ந்தார்.

"ஆனா... ரொம்பப் பெரிய அதிசயம் என்னன்னா, நான் இங்க உள்ள நுழைஞ்ச உடனே கவனிச்சிட்டேன். என்னோட உயிர் நண்பன் பக்கத்தில இருக்கானேன்னு ரொம்ப சந்தோஷமா போச்சு. ஆச்சரியமாக் கூட இருந்துச்சி."

ஜோசப்பிற்கு ஒன்றும் புரியவில்லை.

"சார். நீங்க யாரை சொல்றீங்க?"

"வாங்க காட்றேன்," சுந்தரமூர்த்தி இருக்கையை விட்டு எழுந்தார். கூடவே ஜோசப்பும் எழுந்தார்.

நான்கு அடி உயரத்தில் எழுப்பப்பட்டிருந்த மதில் சுவர் ஒன்று இல்லத்தைச் சுற்றி வளைத்திருந்தது. சுந்தரமூர்த்தி மெல்ல நடந்து அந்த சுவரருகே சென்றார். மதிலின் மறுபக்கம் ரயில் தண்டவாளங்கள் இருந்தன. தெற்கே செல்லும் டீசல் ரயில் ஒன்று பெருத்த இரைச்சலோடு வேகமாக கடந்துபோனது.

சற்று தொலைவில் உபயோகத்தில் இல்லாத நீராவி ரயில் இன்ஜின்கள் ஐந்தாறு ஓரங்கட்டப்பட்டிருந்தன. சுட்டெரிக்கும் வெயிலில் காய்ந்து கொண்டிருந்த அந்தப் பழைய நீராவி ரயில் கூட்டத்தின் மீது சுந்தரமூர்த்தியின் பார்வை விழுந்தது.



படிப்பகம்

www.padippakam.com

“அதோ நிக்குறானே அவன்தான்!”

சுந்தரமூர்த்தி கைநீட்டி குறிப்பிட்ட இடத்தில் ரயில் இன்ஜின்களைத் தவிர வேறு யாருமே இல்லை என்பதையறிந்த ஜோசப், குழப்பத்தில்,

“யாருமே அங்க இல்லையே சார்!” என்றார்.

“அதோ அங்கே நான்காவதா நிக்கறானே, அவன்தான். ரைட் சைட்ல பாருங்க”

ஜோசப்பின் கண்கள் சற்று சுருங்கி விரிந்தது.

“நான் சதர்ன் இரயில்வேயில் லோகோமோடிவ் டிரைவராயிருந்து ரிடயர்ட் ஆயிட்டேன். நாலு வருஷமாச்சு.” சுந்தரமூர்த்தி தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டபோது கூறியது ஜோசப்பின் நினைவுக்கு வந்தது.

அவர் அங்கே நின்றுகொண்டிருந்த ரயில் இன்ஜின்களில் ஒன்றைத்தான் குறிப்பிடுகிறார் என்பதும் புரிந்தது.

“அந்த லோகோதானா சார் நீங்க ஓட்டிட்டிருந்தது!” மிகுந்த ஆச்சரியத்தோடு ஜோசப்பின் கேள்வி எழுந்தது.

“ஆமாம். அவனேதான்”

“நீங்க ஓட்டின லோகோ அதுதான்னு எப்படி உங்களால கண்டுபிடிக்க முடிஞ்சுது?”

ஜோசப்பை மெல்ல ஏறிட்டு பார்த்தார் சுந்தரமூர்த்தி.

“ஒரு வருஷம், ரெண்டு வருஷமில்ல. முப்பத்தி நாலு வருஷம் அவனோட நான் பழகியிருக்கேன். அவன நீங்க ஒரு இயந்திரமா பாக்காதீங்க. அவனுக்கும் உணர்வுகள் இருக்கு. இன்ச் பை இன்ச் அவன எனக்கு தெரியும்”

ஆத்மார்த்த நட்பின் புரிதலோடு சுந்தரமூர்த்தி தன்னுடைய பேச்சை தொடர்ந்து கொண்டிருந்தார்.

“அவனோட உழைப்பு ரொம்பப் பெரிசுங்க ஜோசப். எந்த எதிர்பார்ப்பும் இல்லாத உழைப்பு. அவன் கடுமையா உழைச்சான். கூலியேயில்லாம!”

ஒரு பழைய நீராவி ரயிலை... இத்துப்போன இரும்பு மிஷினை... வெறும் இயந்திரமாக மட்டுமே பாராமல், உயிருள்ள மனிதனாகவே மனதிற்குள் பாவித்து நேசம் கொண்டிருக்கும் சுந்தரமூர்த்தியை அதிசயித்து பார்த்துக்கொண்டிருந்தார் ஜோசப்.

“நான் ரிடயர்ட் ஆன இரண்டு மாசத்துல, அவனையும் டிபார்ட்மெண்ட் வயசாயிடுச்சுன்னு சொல்லி ஓய்வு கொடுத்துடுச்சி. டீசல், எலக்ட்ரிக் ட்ரெய்னெல்லாம் வந்திடுச்சில்ல. அதான் அவன ஒதுக்கிட்டாங்க. முதல்ல யார்டுக்குத்தான் அனுப்பிச்சாங்க. நானும் அப்பப்ப போயி பார்த்துட்டு வருவேன். தனியா... ஒரு மூலையில அனாதையா நின்னுட்டிருந்தான்.”

சுந்தரமூர்த்தியின் குரல் கம்மியது.

ஜோசப்பின் முகத்தில் இறுக்கம்.

“அப்புறம் என்னாச்சு சார்!” என்றார்.

“அவனையும் ஒரு நாள் அங்க காணல. இடநெருக்கடியால யார்ட்ல இருந்து வேற எங்கேயோ கொண்டு போயிட்டாங்கன்னு தெரிஞ்சுது. நெஞ்சு பதறிப்போச்சு. எல்லாமே என்னவிட்டு போன மாதிரி ஒரு வேதனை. அவன தேடி அலைஞ்சேன். எங்கேயும் காணல. இரண்டரை வருஷமா அவன பார்க்கவே முடியாமப் போச்சு.”

சுந்தரமூர்த்தியின் தொண்டைக்குழி விம்மி அடங்கியது.

“அதுக்குப்பிறகு இப்பதான் அவன பாக்கறேன். இங்க அவன சந்திப்பேன்னு நினைக்கவேயில்ல.”

எங்கெங்கோ அலைந்து திரிந்து தேடிய அரியதொரு புதையல் கிடைத்துவிட்டது போல் சுந்தரமூர்த்தியின் முகத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடிக்கொண்டிருந்தது. மழை வருவதையுணர்ந்த மயில் குதூகுலத்தோடு தோகை விரித்தாடுவதைப்போல் அவர் நெஞ்சு ஆனந்தக் கூத்தாடியது. தரை தவழ்ந்து, தட்டுத்தடுமாறி எழுந்து நின்றுவிட்ட குழந்தையின் தெம்பில் அவர் திளைத்திருந்தார்.

என் இருப்பை அறியாது
தொலைபேசி வழியே
என் குரல் வேண்டி
வருகிறது
உன் குரல்

நம் உரையாடல்களில்
வெறுமை வியாபிக்கிறது
எப்போதும்

உயிர்ப்பற்ற
காகித ரோஜாக்களே
எஞ்சியிருக்கின்றன
உனக்கு

கால காலமாய்
கட்டமைத்திருக்கிற
உன் ஆதிக்கத்துள்
அமிழ்த்துகிறாய்
என்னையும்

பரந்த வெளியில்
துவங்குகிறது என் பேச்சு
எழுத்தின் வழியே





படிப்பகம்

www.padippakam.com


AVAILABLE

# TWO / THREE BEDROOM

FLATS

at

- Besant Nagar
- Mylapore
- Vadapalani

RMC

# R.M. CONSTRUCTION

R.M. TOWERS

108, CHAMIERS ROAD, TEYNAMPET, CHENNAI - 600 018.

Phone : 24364343 / 24364344

Fax : 24335897




படிப்பகம்

www.padippakam.com

# இளம் எழுத்தாளர்களின் இலக்கிய வழிகாட்டி வல்லிக்கண்ணன்



தமிழ்ச் சூழலில் ஒரு முழு நேர எழுத்தாளராக - எழுத்தையே நம்பி வாழ்வது எவ்வளவு துயரமானது என்பதை அறிந்திருந்தும் அப்படியான வாழ்க்கையை இளம் வயதிலேயே ஏற்றுக்கொண்டு, அதற்காக பல தியாகங்களைச் செய்து இந்த 84ஆவது வயதிலும் ஓர் எழுத்தாளனுக்குரிய வைராக்கியத்தோடு வாழ்ந்து வருபவர் திரு. வல்லிக்கண்ணன் அவர்கள்.

திருநெல்வேலி மாவட்டம் ராஜவல்லிபுரத்தில் 1920 ஆம் ஆண்டு பிறந்த இவரின் இயற்பெயர் கிருஷ்ணசாமி. 19 ஆவது வயதில் இவரது முதல் சிறுகதை'சந்திர காந்தக்கல்' நாரண துரைக்கண்ணன் நடத்திய 'பிரசண்ட விகடன்' இதழில் வெளியாகி பரவலான வரவேற்பைப்பெற்றது. சிறுகதை, நாவல், குறுநாவல், அரசியல் கட்டுரை, மொழிபெயர்ப்பு, இதழியல் ஆய்வு கடிதங்கள் என இதுவரை 72 நூல்களை எழுதி உள்ளார்.கோரநாதன், சொக்கலிங்கம், மிவாஸ்கி, நையாண்டி பாரதி ஆகியவை இவரது புனைபெயர்கள்.

புதுக்கோட்டையிலிருந்து திருமகள், கோவையிலிருந்து சினிமா உலகம், சென்னையிலிருந்து நவசக்தி, துறையூரிலிருந்து கிராம ஊழியன் ஆகியவை இவர் பணியாற்றிய இதழ்கள்.

திரைப்படத்துக்கு வசனம் எழுதுகிற வாய்ப்பு கிடைத்தபோதிலும், அதை நிராகரித்து விட்டு இலக்கியத்தின் மீதே தீவிர கவனம் செலுத்தியர்.

சாகித்ய அகாதெமி விருது, ஆழ்வார்கள் ஆய்வுமையம் விருது, தமிழ்ச்சான்றோர் பேரவை விருது, ஆதித்தனார் விருது போன்ற பல விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

இவ்வளவு பெருமைகளுக்கும் உரியவரான திரு.வல்லிக்கண்ணன் பார்வைக்கு எளியவராக, பழகுவதற்கு இனியவராக கடந்த அறுபது ஆண்டுகால தமிழ் இலக்கிய உலகின் தகவல் பெட்டகமாக, இளைஞர்களை உற்சாகப்படுத்தி வளர்க்கும் ஆசானாக, சென்னை திருவல்லிக்கேணியில் வசித்து வருகிறார்.

அவரது புதிர் நிறைந்த வாழ்க்கையில் அறியப்படாத சில பகுதிகளை அறிந்து கொள்ளும் ஆவலோடு அவரை அணுகினோம். மிகுந்த ஒத்துழைப்போடு உரையாடினார்.

"வாழ்ந்தால் எழுத்தாளராக வாழ்வது என்பது மாதிரியான வைராக்கியம் சின்ன வயசிலேயே உங்களுக்கு உருவாகியிருக்கு. அந்த காலகட்டத்தில் தமிழ் எழுத்தாளன் பற்றிய உங்களது புரிதல் என்னவாக இருந்தது?

"டால்ஸ்டாய், கார்க்கி மாதிரி தமிழில் எழுதி கவனிப்பைப் பெறணும் என்பதுதான் அப்போதைய என்னுடைய நோக்கமாக இருந்ததே தவிர, எழுத்து மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்கிற நம்பிக்கை எல்லாம் அறவே கிடையாது . அப்போது எழுத்தாளர்களுக்கு உயர்ந்த குறிக்கோள்கள் இருந்தன. பட்டதாரிகள்கூட அரசு வேலைக்குப் போகாமல் எழுதிக்கொண்டிருந்தார்கள். தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் ஏதாவது செய்யணும் என்பதற்காகத்தான் பாரதியும் புதுமைப்பித்தனும் நிறைய கஷ்டங்களை ஏற்றுகொண்டார்கள். கு.ப.ரா, ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா இவர்களெல்லாம் குடும்பத்தை நடத்த முடியாம பொருளாதார ரீதியாக ரொம்ப கஷ்ப்பட்டாங்க. இதெல்லாம் நினைச்சுதான் பிரம்மச்சர்ய வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக்கிட்டேன்."

"நீங்கள் திருமணம் செய்துக்க மாட்டேன்னு முடிவு எடுத்தப்ப, உங்க குடும்பத்திலே இருந்தவங்களோட எதிர்வினை என்னவாக இருந்தது?."

"அம்மா, தற்கொலை பண்ணிக்குவே -ன்னாங்க. நீ அப்படித்தான் சாகணும்னு இருந்தா நான் என்ன பண்ண முடியும்னு சொல்லிட்டேன். அதுக்குப் பிறகு பல நன்பர்கள் எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க முயற்சி செய்தாங்க. நான் ஒத்துக்கலே".

"எழுத்தாளரா ஆகிறதுக்காக எதுக்கு அரசு வேலையை விட்டீங்க. எவ்வளவோ பேர் அரசு உத்தியோகத்தில் இருந்துக்கிட்டு பொருளாதார சிக்கல் இல்லாம எழுதுறாங்களே..?"

"என் எழுத்துப்பணிக்கு இடையூறா இருந்துச்சு என்பதற்காகத்தான் வேலையை ராஜினாமா பண்ணேன். ஊர் சுற்றவும், விருப்பப்பட்ட நேரத்திலே எழுதவும் படிக்கவும் அரசு வேலை ஒத்துவராது. அப்படி ராஜினாமா பண்ணதுக்காக நான் வரத்தப்பட்டதே கிடையாது."

"பத்திரிகை அலுவலகத்திலே வேலை செய்யலாம் என்பறகாக, திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு பொடி நடையாகவே புறப்பட்டு வந்திருக்கீங்களே.... தமிழ்நாட்டு எழுத்தாளர்களிலே இப்படி யாருக்கும் தைரியம் வந்திருக்காது."

"மார்க்சிம் கார்க்கி ரஷ்யா முழுவதையும் நடந்தே போய் பார்த்திருக்கிறார். ஆலிவர் கோல்டு ஸ்மித் ஐரோப்பா முழுவதையும் நடந்தே போய்தான் பார்த்திருக்கிறார். எனக்கும் 22வது வயதிலே தமிழ்நாட்டை நடந்து போய் பார்க்கணும்னு ஆசை வந்துச்சு. சென்னைக்குப் போய் பத்திரிகையில் இருந்துகொண்டு எழுதலாம் என்கிற ஆர்வமும் இருந்தது. இரண்டு பேண்டு, இரண்டு சட்டை, இரண்டு துண்டு - தின்னுகிட்டே நடக்க கொஞ்சம் அவல். இதோட, வீட்டுலகூட சொல்லாம, ஒரு கடிதத்தை மட்டும் எழுதி வச்சிட்டு புறப்பட்டேன். திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு 400 மைல். ஒரு நாளைக்கு 30 மைல் நடந்தால் 14வது நாளிலே சென்னைக்குப் போயிடலாம்னு திட்டம். ஆனா, மூணு நாளைக்கு மேலே என்னால நடக்க முடியலே. உடல்நிலை இடம் கொடுக்கலை."

"கோயில்களை மூடுங்கள்.அடியுங்கள் சாவுமணி, கொடு கல்தா- இப்படி அரசியல் நூல்களெல்லாம் எழுதியிருக்கிறீங்க. உங்களுக்கு அரசியல் இயக்க ஈடுபாடு இருந்ததா?"

"அதெல்லாம் பகுத்தறிவு பிரச்சார நூல்கள். பெர்னாட்ஷா சிறு சிறு பிரசுரங்களை வெளியிட்டுத்தான் பெரிய ஆளானார். அந்த பாதிப்பில்தான் எழுதினேன். இந்த நூல்களுக்கு நிறைய வரவேற்பு இருந்தது. "கோயில்களை மூடுங்கள்" முதல் பதிப்பு 1000 பிரதிகள் அச்சடித்தோம். இருபது நாட்களில் விற்றுவிட்டன.



படிப்பகம்

www.padippakam.com

உடனே மேலும் 2000 பிரதிகள் அச்சடித்து விலையையும் குறைத்து விற்றார்கள். மற்றபடி எந்த அரசியல் இயக்கத் தொடர்பும் எனக்கு இருந்ததில்லை."

"உங்கள் சிறப்பம்சங்களில் ஒண்ணு, சலிப்பில்லாம தொடர்ந்து கடிதம் எழுதிகிட்டிருக்கிறது. இந்தக் கடிதம் எழுதுகிற பழக்கத்தை ஒரு வேலையாகவே செய்துகிட்டு வர்றீங்க. விசேஷமான காரணம் ஏதாச்சம் இருக்கா?"

"எனக்கு சின்ன வயசிலிருந்தே சரளமா பேச வராது. ஆனா, பேசுறதுக்கான விசயம் ஏராளமா இருக்கும். அந்த விசயங்களை கடிதம் மூலமா தெளிவாக - விரிவாக - எழுதமுடியும். கிராம ஊழியனில் வேலை பார்க்கும்போது, நான் எழுதின கடிதங்களை பார்த்துட்டு, வாங்கிற 30 ரூபாய் சம்பளத்தையும் கடிதம் எழுதியே தீர்த்துடுவே போலிருக்கே என்று திட்டியிருக்கிறார்கள். நான் பேச்சாளன் இல்லே. என்னால் நீட்டி மடக்கிப் பேசத் தெரியாது. வேகமா படபடன்னு பேசுறேன்னு சொல்றாங்க. கோவை ஞானிக்கு கண்பார்வை தெரியாதில்லையா, அவர் ஒரு மேடையில் நான் பேசுவதைக் கேட்டுவிட்டு "படிக்கிறாரா?" ன்னு கேட்டாராம். முன்பெல்லாம் மேடையில் பேசுவதையே தவிர்த்தேன். சாகித்ய அகாதமி விருது கிடைத்த பிறகு ஒவ்வொரு ஊரா அழைச்சிட்டு போயி பாராட்டு விழா நடத்துனாங்க. நானும் பேச வேண்டியதாயிடுச்சு".

"தி.க.சி. யிடமிருந்து உங்களுக்கு தினமும் ஒரு கடிதம் வரும்னு கேள்விப்பட்டேன். உண்மையா?"

"ஆமாம். தினமும் அவர் ஒரு கார்டு எழுதுவார். நான் வாரத்துக்கு ஒரு கடிதமாவது அவருக்கு எழுதுவேன்".

"புதிதா ஒரு பத்திரிக்கை வந்தாலோ, புதிசா ஒரு புத்தகம் வந்தாலோ முதல் பாராட்டுக் கடிதம் உங்கள் கடிதமாத்தான் இருக்கும்னு சொல்றாங்க. இது எப்படி உங்களுக்கு சாத்தியமாகுது?"

"என் மீது அன்பு காரணமாக சில நண்பர்கள் எனக்கு இதழ்களை அனுப்புறாங்க. அவங்களை உற்சாகப்படுத்தி ஒரு கடிதம் எழுதினா அவங்களுக்கு அதிலே ஒரு சந்தோஷம். பலபேர் நான் எழுதின முதல் கடிதங்களை பாதுகாத்து வைத்திருக்காங்க! டெலிபோன் வந்தாச்சு, செல்போன் வந்தாச்சு. இன்னும் கடிதம் எழுதிகிட்டே இருக்கணுமான்னு கேட்குறாங்க. என்னதான் பஸ், கார் வசதி வந்தாலும் நடந்து போகிறதிலே ஒரு இன்பம் இருக்கிறதில்லையா? அப்படித்தான் கடிதம் எழுதிறதிலேயும் ஓர் இன்பம் இருக்கு."

"நீங்க ஏன் எல்லாரையும் தாராளமா பாராட்டி எழுதுறீங்க?"

"பாராட்ட வேண்டியதை பாராட்டாம தவற விட்டதாலே, பல நல்ல காரியங்கள் வளராமலே போயிடுச்சுன்னு பாரதியே சொல்லியிருக்காரே."

"முழுநேர எழுத்தாளரா இருக்கிற நீங்க ஏன் வெகுஜன பத்திரிகைகளிலே எழுதக்கூடாது?"

"ஆரம்பத்தில் என்னை எழுதச் சொன்னார்கள். எழுதினேன். பிறகு வெகுஜன பத்திரிகைகளின் தன்மை மாறிவிட்டது. என்னைப் போன்றவர்களைக் கண்டுகொள்வதே இல்லை. என்னை எழுதும்படி கேட்டுக்கொண்டால் எழுதுவேன்."

"உங்கள் எழுத்துக்கு எந்த அளவுக்கு வரவேற்பு கிடைச்சிருக்கிறதா நினைக்கிறீங்க?"

"என்ன மாதிரி எழுத்தாளன் உயிரோடு இருக்கிறபோது தமிழ் வாசகர்கள் அங்கீகரிக்கமாட்டாங்க. வருங்காலத்தில் அதிகமா அங்கீகரிக்கப்படும்னு நம்புறேன்."

"இப்போது தமிழ் பதிப்புத்துறை ரொம்ப வளர்ச்சியடைஞ்சிருக்கு. நீங்கள் நேரடியாகவே புத்தகமா எழுதலாமே?"

"கடவுள் உண்டா இல்லையா என்கிறது சம்மந்தமாகவும், வாழ்க்கை உண்மைகள் பற்றியும் ஒரு நாவல் எழுதலாம்னு இருக்கேன்."

"தமிழ்ப் பதிப்பாளர்களிடமிருந்து ரெமுனரேசன் சரியா கிடைக்குதா?"

"மற்றவர்களுக்கு எப்படியோ, எனக்கு வரவேண்டிய தொகையை சரியா கொடுத்துடுறாங்க."

"உங்கள் அண்ணன் குடும்பத்தோட இருக்கீங்க. அவங்க உங்களுக்கு எந்த அளவுக்கு உதவியா - அனுசரணையா இருக்காங்க?"

"என் வாழ்க்கையில் எனக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியம் என் அண்ணனும், அண்ணியும், குழந்தைகளும். இந்த மாதிரி அண்ணன், அண்ணி கிடைக்கிறது ரொம்ப அபூர்வம். எவ்வளவோ பேரு கல்யாணம் ஆன உடனே பெற்ற தாய் தந்தையை விட்டுட்டு தனிக்குடித்தனம் போயிடுறாங்க. ஆனா, என் அண்ணனும் அண்ணியும் என்னை ஒரு சுமையாக நினைக்காம, தன் பிள்ளையில் ஒருத்தரைப் போலவே என்னையும் பாதுகாத்தாங்க. அண்ணன் மறைவுக்குப் பிறகு அண்ணி , குழந்தைகள் எல்லாம் தொடர்ந்து என் மேலே அன்பு வைத்துகிட்டிருக்கிறாங்க. இது என் வாழ்வில் கிடைத்த பாக்கியம். அண்ணாவின் மகள்களும் திருமணம் வேண்டாம்னு இருக்கிறார்கள்."

"தமிழ்நாட்டில் முழுநேர எழுத்தாளர்களுக்கு சாதகமான சூழல் இருக்கிறதா?"

"விரும்பியதை விரும்பிய நேரத்தில் படிக்கலாம்; எழுதலாம். அதில் ஒரு ஆத்ம நிறைவு கிடைக்கும். கேரளா போன்ற எழுத்தாளரை மதிக்கிற - எழுத்தாளருக்கு நிறைய ராயல்டி கொடுக்கிற மாநிலங்களில் முழுநேர எழுத்தாளராவது சாத்தியம். இங்கே நிலைமை அப்படி இல்லை. பிரபஞ்சன், வண்ணநிலவன் போன்ற எழுத்தாளர்கள் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டுதானே இருக்கிறார்கள். ஆகவே, எழுத்தையே நம்பி வாழக்கூடிய சூழல் தமிழ்நாட்டில் இன்னும் உருவாகவில்லை."

■ சூரியசந்திரன்
சிவ. செந்தில்நாதன்




படிப்பகம்

www.padippakam.com

# உருவாக்குவோம் வா . . .

நிறைய செய்ய வேண்டி உள்ளது
பூமியை கையில் எடு
மரங்களை அதில் நடு
கிளைகளில் பூக்கள்
மலைகளை வரிசையாய் நிறுத்து
நிலாவைத் தொங்க விடு
நீல வானிற்கு நிறைய இடம் கொடு
நட்சத்திரங்களை ஒளிர விடு
காற்றை வேகப்படுத்து
சிறகுகளின் அசைவுகளுக்கு சுருதி சேர்
இதழ்களை சிரிக்க விடு
கண்களுக்கு ஒளியூட்டு
சாலையோரம் நடனமிடும் நிழல்கள்
வாழ்க்கை...
கடவுள் எதையும் செய்வதில்லை
நீ ஏன் வர மறுக்கிறாய்
பிரபஞ்சத்தை உருவாக்க வேண்டும்
வா!
எல்லாவற்றையும் என்னால்
மட்டும் செய்ய முடியாது . . .

■ நிடா ஃபாசில்
தமிழில் : வ. இராமு

# விடியல்

ஆதவனை சிறைபிடிக்கிறது
பனி
அண்டவெளியெங்கும்
பரவி நிரம்பி
உறைந்துகிடக்கிறது
பச்சை
செடிகொடிகளை
ஆக்கிரமித்து
புற்களின் விழிநுனியில்
கண்ணீர் கசிந்தபடி
சாலையிலும், வீதியிலும்
ஆளரவமேயின்றி
மௌனம்
போத்திக்கொண்டிருக்கிறது
மரங்களெல்லாம்
விறைத்து
ஒடுங்கிக்கிடக்கும்
வேளையில்
பனித்திரையை கிழித்து
ஒரு துளி கதிர்
முளைக்கிறது.
விடியல்

■ சா. இலாகுபாரதி

# வராமல் போய்விடுங்கள்

விருப்பங்களை தின்று
பெருக்கடிக்கப்படும்
ஆடுகளைப் புசிக்க
அழைக்கப்படும்
பசியற்ற விருந்தினர்கள்
பிறகு,
உங்கள் கொண்டாட்டத்தின்
மண்டபம் முழுதும்.
எதிர்பார்ப்புகளின்
அடியில் விழும்
கோடாரி காம்புகள்
தானே பிளந்துகொள்ளும்
அதிர்ச்சியில்,
உடல்தணிய
உட்காரும் படியாகிவிடுகிறது
அதன் நிழலிலேயே:
“வெட்டி அலுத்த
காலத்திற்குப்பின் பெய்யும் மழையில்
அது தனது பூக்களை பார்த்துக்கொள்ள
விட்டுச் செல்வாயா வேரினை மட்டும்?”
பறவைகள் பயத்தில் எச்சமிட்டு
கெஞ்சிப்போவது புரியாதவர்கள்போல்
களையத் தொடங்கிவிடுகிறீர்கள் வேர்களை.
காற்றின் திசையெங்கும்
ஒலித்துக்கொண்டிருக்கிறீர்கள்
வரச்சொல்லிவிட்டு...
கதவடைத்துக் கொள்வதற்கான
காரணங்களைத் தவிர–
“இதோ வந்துகொண்டேயிருக்கிறார்
உங்கள் வாசல்தேடி” முன் அலறலோடு
வந்து கொண்டும் இருக்கிறீர்கள்
இயலாமை எரியும்
இந்த வாசலற்ற வீடுகளுக்கு
வராமல் போய்விடுங்கள்
அமைதி வேண்டும் எங்களுக்கு.

■ இளம்பிறை



படிப்பகம்

www.padippakam.com

வாழ்த்துக்களுடன்



பாரதி டிராவல்
BHARATHI TRAVELS
TRAVEL AGENTS

தங்கள் எல்லாவித பயணங்களுக்கும்
எங்களிடம் புத்தம் புதிய சுற்றுலா
சொகுசு (வீடியோ) பேருந்துகள்
குறைந்த கட்டணத்தில் கிடைக்கும்

10, EVENING BAZAR ROAD,
CHENNAI - 600 003
Phone : 2535 3493

# பருவங்கள் பொய்த்துவிடும்போது

■ ஆசு

பருவங்களில்
நடவு செய்யாதவனின்
பாத்திரமாய் இன்றென் நிலம்

வெடித்துக் குமுறுகையில்
மேகச் சில்லிடும்
சிறு தூறலில் இவ்வரி ஊற்றெடுக்கிறது

ஜன்னலில் வழியும்
நிலாவை காலுதைத்து
குதூகலிக்கும் மனசில்
காலமெல்லாம் பச்சையாக
தாய்மைக் கனவில் ஒரு சொட்டு நீர்

எனினும்
பருவங்கள் பொய்த்து
தப்பிவிடுகின்றன

தொப்பூழ்க் கொடியறுத்து
குருதிச்சொட்டும் கணங்களில்
மீண்டும் மீண்டும் பெருகுகின்றன
கால கருமுகத்தில் கண்ணீர்த்துளிகள்

வாழ்த்துக்களுடன்

சக்தி வாகன உதிரிபாகம்
விற்பனையகம்
SAKTHI AUTO SPARE PARTS

முதன்மைச்சாலை (சங்கு அருகில்)
கீழ்ப்பென்னாத்தூர்-604 601

கி.தமிழரசன்
பேசி: 04175 249228



படிப்பகம்

www.padippakam.com

*With Best Compliments*

# Kumaran Silks

**Weaving dreams since 1955**

12, Nageswaran Road, Opp. Panagal Park, T. Nagar, Chennai - 600 017.
Ph : 2434 3544 / 3727 / 3757  Fax : 044-2434 3797
e-mail : kumaransilks@vsnl.com  Web : www.kumaransilks.com

One address. Only one *Kumaran Silks*

## ரியாஸ் ஆட்டோ ஸ்பேர்ஸ்

நெ.8, மசூதி வளாகம், 100 அடி சாலை,
எம்.ஜி.நகர், தரமணி, சென்னை - 600 113

*பஜாஜ், கிரீவ்ஸ் கருடா,*
*அபே, பேஜ்ஜியோ மினிடோர்,*
*மகிந்திரா சாம்பியன் உதிரி பாகங்கள்*
*இங்கு கிடைக்கும்.*

டீசல் வண்டி பழுது பார்க்கப்படும்

**தமீம் அன்சாரி**



**Life is for living**

**Love is for giving**

## S. Rajendran

6-46, RBI Staff Quarters,
P.H.Road, Kilpauk,
Chennai-600 010
Cell: 98402-65967



படிப்பகம்

www.padippakam.com


வாழ்த்துக்களுடன்

திவ்யா

சாரீஸ் சென்டர்

செஞ்சி போன் : 04145-222558

சேத்துப்பட்டு போன் : 04181-252280

அவலூர்பேட்டை போன் : 04181-233346

திவ்யா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

திவ்யா ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

சேத்துப்பட்டு, போன் : 04181-252714




படிப்பகம்

www.padippakam.com

# பதிவுகள்

- தமுஎச தென்சென்னை மாவட்ட பேரவைக்கூட்டம் 10.03.2004 அன்று நடைபெற்றது. மாவட்டத் தலைவர் கே.பி.பாலச்சந்தர் தலைமை தாங்கினார். ராஜேஸ்வரி இசைப்பாடல்களுடன் கவிதை வாசிப்பும் இடம்பெற்றது. முனைவர் பத்மாவதி விவேகானந்தன் "இலக்கியம் அன்று முதல் இன்று வரை" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

- இலக்கியப் போராளி சு.சமுத்திரம் நினைவு நாள் நிகழ்வு 1.4.2004 வியாழன் அன்று தென்சென்னை-வடசென்னை மாவட்டக்குழுக்கள் சார்பில் நடைபெற்றது. வழக்கறிஞர் ச.செந்தில்நாதன் நிகழ்விற்கு தலைமை வகித்தார். வடசென்னை மாவட்டச் செயலாளர் பா.ராமச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார். எழுத்தாளர் பா.செயப்பிரகாசம், சன் டிவி திரு.வீரபாண்டியன், பேராசிரியர் இராம. குருநாதன், திருப்பூர் கிருஷ்ணன், சாகித்ய அகாதெமியின் அ.சு.இளங்கோவன், முகம் மாமணி, கவிஞர் இரா.தெ.முத்து, பிரின்ஸ் கஜேந்திரபாபு ஆகியோர் சு.சமுத்திரத்தின் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர். எஸ்.கே.சிவா நன்றி கூறினார்.

- திருவல்லிக்கேணி கிளை 5.3.2004 வெள்ளியன்று "தமிழ் எழுத்து சீரமைப்பு"-ஆய்வரங்க நிகழ்வை நடத்தியது. வழக்கறிஞர் ச.செந்தில்நாதன் தலைமையில் இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் வா.செ.குழந்தைசாமி ஆய்வுரை நிகழ்த்தினார். 'ஆராய்ச்சி' காலாண்டிதழ் ஆசிரியர் மே.து.ராசுகுமார் கருத்துரை வழங்கினார். கிளைத் தலைவர் புலவர் உதயை மு.வீரய்யன் வரவேற்க கிளைச் செயலாளர் கவிஞர் நா.வீரபெருமாள் நன்றி கூறினார்.

- அண்ணாநகர் கிளை ஏஷியாட்டு காலனி வீட்டு உரிமையாளர்கள் நலச்சங்கத்துடன் இணைந்து மார்ச் 7 உலக மகளிர் தின நிகழ்வை நடத்தியது. நிகழ்ச்சிக்கு அம்பத்தூர் நகர்மன்ற உறுப்பினர் ஜெயகுரு சுப்பையா தலைமை வகித்தார். நலச்சங்க இணைச் செயலாளர் கேபிரியல் வரவேற்றார். இசைப்பாடல்களும், கவிதை வாசிப்பும் சிறப்பு சேர்த்தன. "பெண்களை இழிவுபடுத்தும் ஊடகங்கள்" என்பது பற்றி விவாதம் நடைபெற்றது. அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநில நிர்வாகி பிருந்தா, உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் மாநிலதுணை அமைப்பாளர் டி.ஏ.லதா ஆகியோர் பங்கேற்றனர். எழுத்தாளர் அமரந்த்தா சிறப்புரை ஆற்றினார். பெண்கள் தற்காப்பு கலை நிகழ்வை தீபா, ராஜேஸ்வரி, ஜெயலட்சுமி நடத்திக்காட்டினர். கிளைத் தலைவர் க.இராசரத்தினம் நன்றி கூறினார். கே.பி.பாலச்சந்தர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

- திருவான்மியூர் கிளை சார்பில் கவிதை கேளுங்கள் நிகழ்வு 28.3.2004, காமராஜர் நகர் மேற்கு குழந்தைகள் பூங்காவில் நடைபெற்றது. கிளைத் தலைவர் கருப்பையா தலைமையில் தமிழ்ச்செல்வன் வரவேற்க கி.அன்பரசன் கவிதைகளைத் தொகுத்தளித்தார். எழுத்தாளர் கமலாலயன் சிறப்புரையாற்ற கிளை நிர்வாகி உதயன் நன்றி கூறினார். இளம் கவிஞர்களின் கவிதைகள் பார்வையாளர்களை உற்சாகமூட்டியது.

- எம்.எம்.டி.ஏ கிளை சார்பாக 7.4.2004 புதன் நூல் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கே.பி.பாலச்சந்தர் தலைமை வகித்தார். ரவிக்குமார் தொகுத்த சிந்தனையாளர் எட்வர்டு செயதின் ஆளுமையைச் சொல்லும் 'பணிய மறுக்கும் பண்பாடு' நூலினை ஆய்வாளர் லட்சுமணன் அறிமுகம் செய்தார். எழுத்தாளர் அமரந்த்தா தமிழாக்கம் செய்த 'ஹொஸே மார்த்தி' என்ற நூலினை எழுத்தாளர் கமலாலயன் அறிமுகம் செய்தார். எழுத்தாளர் அமரந்த்தா கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்தார். மாவட்டச் செயலாளர் சைதை ஜெ. மாவட்ட செயல்பாடுகள் குறித்துப் பேசினார். இறுதியில், கிளைச் செயலாளர் சிவ.செந்தில்நாதன் நன்றி கூறினார்.

- சூளைமேடு கிளை சார்பாக 27.2.2004 சுந்தரமூர்த்தியின் 'தென்கிழக்கு பருவமழை' கவிதைத் தொகுப்பு அறிமுகக்கூட்டம் நடைபெற்றது. மயிலை பாலுவும் ஜெகஜீவன் ராமும் நூலினை அறிமுகம் செய்தனர். கிளைச் செயலாளர் ரவீந்திரபாரதி தலைமையேற்க அன்பரசன் வரவேற்க கீதப்பிரியன் நன்றி கூறினார்.

Owned & Published by V. Ramu from 36, Kodambakkam Road, West Mambalam, Chennai - 33
Printed by D. Premnath Kumar at Royal Graphics, 76, Seshachalam Street, Saidapet, Chennai - 15.
Editor : Mylai Balu



படிப்பகம்

www.padippakam.com

நிகழ்வு

# பசும்புல் துளிர்க்குமா?

■ மண்ணாந்தி

> அருவிகள் வீழ்ந்ததும்,
> ஊற்றுகள் சுரந்ததும்,
> அணைகள் பொங்கியதும்,
> நதிகள் பாய்ந்ததும்,
> கனவாய் போனதேனோ!

தண்ணீர் அரிய பொருளாக மாறக்கூடிய அபாயச் சூழலில்-

மூன்று பக்கமும் நூற்றுக்கணக்கில் பார்வையாளர்கள் அமர்ந்திருந்த நாடக அரங்கம் இருளிலிருந்து ஒளிர்ந்தது.

"அனைவருக்கும் வணக்கம்! நாடகம் இன்னும் ஒருசில நொடிகளில் ஆரம்பிக்க" என அரங்கிலிருந்து ஒரு நடிகர் கூற "ஐய்யய்யோ! இன்னும் பாதிபேருக்கு மேக்கப் முடியல இன்னும் அரைமணி நேரம் ஏதாவது பேசி சமாளி" என மேடையின் பின்புறமிருந்து ஒரு குரல்.

இதைக் காதில் வாங்காமல் அரங்கிலிருந்த நடிகர் மீண்டும் "இன்னும் ஒருசில நொடிகளில் நா..." என கூறும்போதே அவருக்கு விக்கல் வந்துவிடுகிறது.

விக்கிக்கொண்டே தண்ணீருக்காக சுற்றிச் சுற்றி ஓடுகிறார். ஒவ்வொரு திசையிலிருந்தும் ஒருவர் ஓடிவந்து 'நீலு லேது', 'பாணி நஹி ஹை', 'தண்ணி இல்ல', 'No water' என பல மொழிகளில் கைவிரிக்க நீர், நீர், நீர் எனும் கோஷத்துடன் நாடகம் துவங்குகிறது. கங்கை எப்படி புனிதத்தின் பெயரால் பிணங்களாலும் கழிவுகளாலும் மாசுபடுகிறது எனவும் ஆழ்துளை கிணறுகளால் விளையும் ஆபத்து குறித்தும் தண்ணீர் பிரச்சனை பொது பிரச்சனையாக இல்லாமல் அதிலும் கூட ஏற்றத்தாழ்வு குறிப்பாக தனிக்கிணறு, காலனி கிணறு எனவும் நதி நீர் இணைப்பால் பிரச்சனை தீராது எனவும் காட்சிகள் நகர்ந்துகொண்டே இருந்தன.

நிலப்பிரபு, நிலச்சுவான்தார் இருப்பதுபோல நீர்ப்பிரபுக்கள், நீர்க்கிழார்கள், நீர்ச்சுவான்தார்கள் உருவாகி வருவது அற்புதமாகக் காட்சியாக்கப்பட்டிருந்தது. நாடகத்தின் இறுதியில் பன்னாட்டு நிறுவன 'நீர்ப்பிரபு' வை மக்கள் முற்றுகையிட்டு "நீர் வளத்தை பாதுகாக்க போராட்டத்தினை இப்போது நாங்கள் துவங்குகிறோம், முடிப்பது நீங்கள்" என பார்வையாளர்களை நடிகர்கள் சமூக அக்கறையோடு போராட அழைத்தபோது கரவொலி அடங்க நீண்ட நேரமானது.

கிராமியப் பின்னணி கொண்ட இசைப்பாடல்களும் தேவராட்ட ஒயிலாட்ட அசைவுகளுடன் அருமையாகக் காட்சி அமைக்கப்பெற்றது பாராட்டத்தக்கது. கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் நம்கண்முன் நாடகமாக இல்லை நிஜமாக நிகழ்த்திக் காட்டியது ஓசூர் டி.வி.எஸ். அகாடமியில் பயிலும் 8 மற்றும் 9-ஆம் வகுப்பு மாணவ மாணவிகள்.

முதலில் மாணவர்கள் நதிநீர் இணைப்பு பற்றி நாடகம் போடவுள்ளதாகக் கூற நாடக இயக்குநர் நதிநீர் இணைப்பு பயன்தராது மீண்டும் ஆதிக்க சக்திகளும், அதிகார வர்க்கமும்தான் பயனடையும். மேலும் சுற்றுச் சூழல் பாதிப்பும் ஏற்பட வாய்ப்பு உள்ளது எனக் கூற பிறகுதான் மேற்கண்ட நாடகம் தயாரானதாம்.

இந்நாடகத் தயாரிப்புக்கான கள ஆய்வு பள்ளியைச் சுற்றியுள்ள கத்திமுகம், கல்சபள்ளி, பெத்தலபள்ளி மற்றும் கதிரேபள்ளியில் மாணவர்களாலேயே நடத்தப்பட்டது. நீர் ஆதாரம் குறித்த தகவல்கள், புகைப்படங்கள், அட்டவணைகள் என மாணவர்களே சேகரித்து நாடகத்தில் பயன்படுத்தியது மாணவர்களின் பிரதிபலிப்புத் தன்மை, தன்னம்பிக்கை, அறிவுத் திறனை வெளிப்படுத்தியது.

இறுதியில் இந்நாடகத்தை ஒருங்கிணைத்த நெறியாள்கையாளரை மேடைக்கு அழைத்தபோது அரங்கமே கரவொலியால் அதிர்ந்தது. அந்த இயக்குநர் வேறு யாருமல்ல. வீதி நாடகக் கலைஞர் சென்னைக் கலைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் பிரளயன்தான்.

நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்பே இடி மின்னலுடன் ஆரம்பித்த மழை, நாடகம் முடிந்தும் தொடர்ந்து பெய்துகொண்டிருந்தது.

நாடகத் தயாரிப்பில் துணை ஒருங்கிணைப்பாளர் திருமதி முத்தழகம்மை நன்றி கூறியபோது நாடகத்தை மழை வரவேற்றது நம் அனைவருக்கும் பெருமை என்றார்.

நாடகத்தில் ஓர்காட்சி 'மழை வேண்டி வருணன் கொடும்பாவியை பாடைகட்டி, செருப்பு, துடைப்பத்தால் அடிப்பதாக அமையும். (இது கள ஆய்வில் மாணவர்கள் கேட்ட செய்தி நாடகமாக்கப்பட்டிருந்தது)

நாடகத்தில் வருணனை செருப்பால் அடித்ததாலோ என்னவோ மழை 'சோ'வென பெய்து கொண்டிருக்கிறது என நிகழச்சித் தொகுப்பாளர் நகைச்சுவையுடன் கூற அரங்கத்தில் கரவொலி மழை பெய்தது. காக்கை உட்கார பணம் பழம் விழுந்த கதை என்பார்களே அது இதுதான் போலும்! அர்த்தமுள்ள நாடகத்தைப் பார்த்த நினைவுகளோடு மழையில் சுகமாய் நடக்க ஆரம்பித்தோம்.

படிப்பகம்

www.padippakam.com


*For Guaranteed Quality*

**Diamonds**

**Gold Jewels**

**Platinum**

**Silver Wares**

**Birth Stones**

**GRT DIAMONDS**

EXCLUSIVE SHOWROOM

**G.R. Thanga Māligai** ®

136, Usman Road, T. Nagar, Chennai - 600 017.
Tel.044-2434 5062 Fax : 044-2434 4495
E-mail: grtjewels@vsnl.com Website: www.grtjewels.com
BRINGING PROSPERITY
SINCE 1964


படிப்பகம்